28-6-1994


# சுதந்திரப் பறவைகள்

பறவை 09 பாடல் 05 1994 ஆனி அன்பளிப்பு ரூபா 5.00


# பெண்களுக்கு எதிரான வன்முறை வடிவங்கள் உலக மகளிர் அமைப்புகள் போர்க்குரல்

## பெண்களின் உரிமைகளை வலியுறுத்தி வியன்னா மாநாட்டில் தீர்மானங்கள்

**பெண்களுக்கு எதிராக நிகழும் வன்முறை வடிவங்களை கண்டித்து, உலக மகளிர் அமைப்புகள் கைச்சாத்து மனுப்பிரச்சார இயக்கம் ஒன்றை சர்வதேச ரீதியாக நடத்திவருகின்றன. சமீபத்தில் வியன்னாவில் நடைபெற்ற அனைத்துலக மனித உரிமைகள் மாநாட்டில் 124 நாடுகளைச் சேர்ந்த 5 லட்சம்பெண்கள் கைச்சாத்திட்ட மனுக்கள் கையளிக்கப்பட்டன. உலகடங்கிலுமுள்ள 800 மகளிர் அமைப்புகள் இந்தக் கைச்சாத்து இயக்கத்தில் பங்கு கொண்டன. அடுத்த ஆண்டு சீனாவில் நடைபெறவிருக்கும் உலக மகளிர் மகாநாட்டிலும் இந்தக் கைச்சாத்து மனுக்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.**

பொது வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் பல்வேறு வடிவிலான வன்முறைகள் முற்றாக இல்லா தொழிக்கப்படவேண்டும் என்றும், பெண்களதும் சிறுமிகளதும் மனித உரிமைகள் ஐ. நா. சாசனத்து மனிதகுல உரிமைகளின் இணைபிரியாத அங்கமாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்றும் வலியுறுத்தி வியன்னாவில் நடைபெற்ற உலக மனித உரிமைகள் மகாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மனித உரிமைகள் சம்பந்தமான வியன்னா மாநாட்டுப் பிரகடனம் 139 தீர்மானங்களைக் கொண்டதாகும். இதில் 13 தீர்மானங்கள் பெண்களது உரிமைகள் பற்றியது.

'பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான வன்முறைகள், துன்புறுத்தல்கள், விபச்சார வாணிபத்தில் பெண்களைப் பயன்படுத்தல் போன்றன பெண்ணினத்தின் கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் குற்றங்கள். இவை உடனடியாக இல்லாதொழிக்கப்படவேண்டும். சட்ட ரீதியாகவும் மற்றும் பல்வேறு நடவடிக்கைகள் மேலாகவும் இந்தக் கொடுமையையொழித்துவிட உலக நாடுகள் முன்வர வேண்டும், என்று வியன்னா பிரகடனத்து தீர்மானம் ஒன்று கூறுகிறது.

போர் சூழ்நிலையில் பெண்கள் பெரும் தொகையில் பாலியல் வன்செயலுக்கு ஆளாக்கப்படுவதும் அகதிகளாக இடம்பெயர்வதும் நிறுத்தப்படவேண்டும் என இன்னொரு தீர்மானம் வலியுறுத்துகிறது.

பெண்களுக்கு சமத்துவமும், சமஉரிமையும் மற்றும் அடிப்படையான மனித சுதந்திரங்களும் வழங்குவதற்கு சகல அரசுகளும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும், ஐ. நா நிறுவனங்களும் சர்வதேச ரீதியான அவற்றின் செயற்பாடுகளும் பெண் உரிமைக்கு முன்னுரிமை கொடுக்க

(2 ம் பக்கம் பார்க்க)



தலைவனின் அணைப்பில் பிஞ்சுகள்

உள்ளே


★ கல்வி வளர்ச்சிக் கழகங்கள்.

★ பெண் கல்வியும் குழந்தை வளர்ப்பும்.

★ பெண்ணை மதிப்போம்.

★ வீரதீர விளையாட்டுக்க உலகில் இரு இளம் புயல்கள்.

★ பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்.

★ தமிழீழச் சட்டங்கள் பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கத் தோள் கொடுக்கின்றன.


விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடு

எங்கள் பார்வையில்...

# ஏன் இந்த மௌனம்!

தமிழீழ மக்கள் சமுதாயத்தை, குறிப்பாகப் பெண்களின் வாழ்நிலையை மிக மோசமாகப் பாதித்துவருகின்ற பிரச்சினைகளுள் 'சீதனம்' பிரதான இடம் ஒன்றை வகிக்கின்றது. ஒரு பெண்ணின் திருமணப் பேச்சுக்களின்போது, சீதனமாக எவற்றை, எந்த அளவில் பரிமாறிக் கொள்ளவேண்டும் என்ற பேச்சு வரும்போது அத் திருமணத்தோடு சம்பந்தப்பட்ட பெண் பெரும்பாலும் மௌனமாக இருப்பதுதான் வழமை. பெண்ணின் இந்த மௌனமும், சீதனம் அண்மைக் காலமாக பூதாகரமான வடிவம் எடுத்திருப்பதற்கான காரணங்களுள் ஒன்று எனலாம்.

இந்தச் சீதனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நாம் எடுக்கப் போகும் சட்ட நடவடிக்கையின் முதற் கட்டமாக, நாம் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளோம். மக்களுக்குச் சீதனத்தின் பாதிப்புகளைக் கூறி, மக்களிடம் இதுபற்றிய ஆலோசனைகளைக் கேட்டு, சீதனத் தடைச் சட்டத்தை அமைப்பதற்கான முன் நடவடிக்கையே இது.

நாம் பரவலாக எல்லா இடங்களிலுமே இப் பிரச்சாரத்தை நடத்தி வருகின்றோம். மக்கள் எங்களுக்குப் பரவலாக ஒத்துழைப்புத் தருகின்றார்கள். சீதனத்தின் தாக்கத்தைப்பற்றி நிறையச் சொன்னார்கள். சட்டத்தை அமைப்பதற்கான ஆலோசனைகளைச் சொன்னார்கள். தம் சந்தேகங்கள் சிலவற்றைக் கேட்டுத் தெளிந்துகொண்டார்கள். ஆனாலும் எமது நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை என்றுதான் கூற வேண்டும்.

சீதனத்தின் தாக்கத்தால் தமது வாழ்வின் அமைதியை இழந்த, அமையவிருந்த மணவாழ்வை இழந்த, இதுபோன்ற சிக்கல்களை இனி தம் வாழ்வில் எதிர்நோக்கப்போகின்ற பெண்கள் தமது கருத்தைச் சொல்லவில்லை. எதையும் புதிய கண்கொண்டு பார்க்கவேண்டிய உற்சாகமான இளம் பெண்கள் தம் வாய்களுக்குப் பலமான பூட்டுக்களை போட்டுக் கொண்டார்கள். மிகவும் வயது முதிர்ந்த அன்னையர் சிலர் மட்டும் எழுந்து நின்று, தாம் சந்தித்த பிரச்சினைகளைச் சொன்னார்கள். நூற்றுக்கு ஐந்து வீதமான பெண்கள்கூட கருத்துக் கூறவில்லை என்பதுதான் உண்மை.

இந்த விடயத்தைப்பற்றி, பெரும்பாலான பெண்களின் மௌனத்தைப்பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். பெண்களைப் பலமாகப் பாதிக்கின்ற பிரச்சினை ஒன்றைப்பற்றிப் பெண்களே பேசவில்லையென்றால், அவர்களின் பின்னணியைப்பற்றி ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியமாகிறது.

பிரச்சாரக் கூட்டங்களுக்கு வந்த பெண்களில் சிலரைத் தனியாகச் சந்தித்து நாம் கதைத்தபோது. அவர்கள் சீதனத்தைப்பற்றியும், தடைச் சட்டத்தைப்பற்றியும் தமது கருத்துக்களைக் கூறினார்கள். 'இந்தக் கருத்துக்களை ஏன் கூட்டம் நடைபெற்றபோது கூறவில்லை' என்று நாம் கேட்டோம். இக் கேள்விக்குப் பலவிதமான பதில்கள் வந்தன.

'அவ்வளவு பேருக்கு முன்னாலேயும் எழுந்து நின்று கதைத்து குடும்ப மானத்தைக் கெடுத்துவிட்டதாக அண்ணன் ஏசுவார்'.

'உனக்குச் சீதனம் கொடுக்க வழியில்லாமல்தான் கூட்டத்திலே கதைத்தாய் என்று ஊரிலுள்ள இளைஞர்கள் கேலி செய்வார்கள்'

'அடக்க ஒடுக்கம் இல்லாதவள் என்று சனம் ஏசும்'
என்பவை எமக்குக் கிடைத்த பதில்களுள் சில.
இந்தப் பதில்களின் பின்னணியைப் பார்ப்போம்;

எமது சமூகம் ஆணாதிக்கம் உச்ச நிலையிலிருக்கின்ற சமூகம். இங்கே குடும்பத்துக்குள்ளேயும், வெளியேயும் நடைபெறும் எந்த விடயத்திலும் ஆணே முடிவுகளை எடுக்கின்றான். தன்னைப்பற்றி மட்டுமல்லாது, பெண்ணைப்பற்றியும் ஆணே முடிவுகளை எடுக்கின்றான். அந்த முடிவை ஏற்றுக்கொள்ளுமாறு பெண் நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். நீண்டகாலமாக இதுவே நடைமுறையாக இருப்பதால், பெண்கள் தம்மைப்பற்றியோ, சமூகத்தைப்பற்றியோ சிந்திக்கவும் முடிவெடுக்கவும் முயலுவதில்லை. தன்னைச் சுற்றி ஒருவட்டத்தை வரைந்துகொண்டு தனக்கு இடப்படும் கட்டளைகளை நிறைவேற்றிக்கொண்டு அதற்குள்ளேயே வாழ்கின்றார்கள்- தற்செயலாக அவள் தலை நிமிர முனையும்போது வெளியிலுள்ளவர்களால் மீண்டும் உள்ளேயே தள்ளப்படுகின்றாள்.

சமூகத்தின் அழுத்தங்களால் தன்னைச்சுற்றி அவள் வரைந்த வட்டமே அவளுக்குச் சிறையாகிப் போனது. பலமான எதிர்ப்புக் கிளம்பினாலும், அந்த எதிர்ப்புகளின்மத்தியிலும் பெண்கள் வெளியே வர முனைய வேண்டும். பெண்களின் நலன் கருதிச் செய்யப்படுகின்ற நடவடிக்கைகளிலாவது கலந்துகொள்ள முனையவேண்டும். கருத்துச் சொல்ல முனையவேண்டும்.

நாட்டை மீட்பதற்காகவும் பெண் விடுதலையை வென்றெடுப்பதற்காகவும் ஒரு போராட்டம் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் இன்றையகாலம் உள்ளே இருக்கும் பெண்கள் வெளியே வருவதற்கு வாய்ப்பான ஒரு காலமாகும். இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பெண்கள் தமது சிறைகளை உடைத்தெறியவேண்டும்.

### பெண்ணுக்கு எதி...

வேண்டும் என்றும், வேறொரு தீர்மானத்தில் கூறப்படுகிறது.

மத தீவிரவாதம், பிற்போக்கான பண்பாட்டு வழக்குகள், பாரம்பரிய சம்பிரதாயங்கள் ஆகியனவற்றால் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளும் ஒழிக்கப்படவேண்டும் என ஒரு தீர்மானம் வலியுறுத்துகிறது.

2000 ஆண்டளவில், பெண்களுக்கு எதிரான சகல அடக்குமுறைகளையும், வன்முறைகளையும், பாரபட்சமான நடவடிக்கைகளையும் நிறுத்துவதற்கு ஐ. நா வில் அங்கம்வகிக்கும் சகல நாடுகளும் ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுக்கவேண்டுமென வியன்னா பிரகடனம் கேட்டுக் கொள்கிறது.

பெண்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்க ஐ. நா சபை தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை அடுத்த ஆண்டு சீனாவில் நடைபெறவிருக்கும் உலக மகளிர் மாநாட்டில் முன்வைக்கப்படவிருக்கிறது. இதற்கான கைச்சாத்துமனுப் பிரச்சாரத்தில் உலககெங்குமுள்ள பெண் அமைப்புகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

### பேராசான் துரைராசாவின் நினைவாக

எப்புகழும் வேண்டாத உத்தமன் நீ.
இதயத்தால் கசிந்து உழைத்தவன் நீ.
பற்றுடன் தேசத்தில் பணிபுரியும் பண்பை
நித்தமும் செயலால் நிருபித்தவன் நீ;

சுற்றிச் சுழன்ற பம்பரம் செயலிழந்தது.
சுயநலம் அற்ற குயில் மூச்சிழந்தது.
மனித (த)த்துவம் கற்பித்த மாமனிதர் விழி ஒளி
-இழந்தது
மண்ணிலே பெரு விருட்சம் அடிசாய்ந்தது.



### பெண்ணை...

ஒருநாட்டின் முன்னேற்றத்துக்கு அங்குள்ள பெண்ஆண் இருபாலரும் சம அந்தஸ்து உள்ளவர்களாக் மதிக்கப்பட்டு, இருபாலரின் உழைப்புக்களுமே அவர்களுடைய வாழ்வில் முக்கிய பங்குகொள்ள வேண்டும். இத்தகைய நிலையில் பெண்ணை ஆற்றலுள்ளவளாக, ஆளுமையுள்ளவளாக, சக்தியின் பிறப்பிடமாக மதிப்போம்; மதிக்கப் பழகுவோம்.

### ★ கணனியைத் தோற்கடித்த சகுந்தலாதேவி ★

கணிதத்துறையில் புகழ்பெற்று விளங்கும் திருமதி சகுந்தல தேவியை 'ஹியூமன் கம்ப்யூட்டர்' என்று உலகநாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன இவர் இந்தியாவைச் சேர்ந்தவர். லண்டனில் உள்ள இம்பீரில் கல்லூரியின் கம்ப்யூட்டர்துறை இவரைச் சோதனை செய்தது. இரண்டு மூன்று ஸ்தான எண்களின் பெருக்குத் தொகைக்கான விடையை 28 வினாடிகளில் மனத்திற்குள்ளாகவே கணக்கிட்டுக் கூறினார். இவரது வேகம் கணனியைக்காட்டிலும் அதிகமானது. இச்சாதனை 1980 ஜூன் 18ஆம் தேதி நடந்தது. திருமதி சகுந்தலாதேவிக்குக் கொடுக்கப்பட்ட பெருக்குத் தொகை 7, 686, 369, 774, 870, 2, 465, 099, 745, 77. என்பதாகும். 28 வினாடிகளில் இவர் சொன்ன சரியான விடை 19, 947, 6689 177, 995, 426 என்பதாகும்.

இவருக்கு முன் நெதர்லேண்ட் நாட்டைச் சேர்ந்த வில்லியம் கலீன் என்பவர் 100 ஸ்தான எண்களின் 13ஆவது வர்க்க மூலத்தினை சுருக்கத்தினை 2 நிமிடம், 5 வினாடிகளில் கூறி சாதனைபுரிந்தார். இச்சாதனை 1980 மே 6ம் தேதி லண்டனில் நடந்தது ஆனால் இவரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டார் சகுந்தலாதேவி.

Nallur Branch Library

## விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின்

# கல்வி வளர்ச்சிக் கழகங்கள்

ஒரு நாட்டின் எதிர்காலம் அந்நாட்டின் இளைய தலைமுறையினரின் கையிலேயே தங்கியுள்ளது. ஆகவே இளைய தலைமுறையினர் அறிவுள்ளவர்களாக, ஆற்றல் மிகுந்தவர்களாக, பொறுப்புணர்வு கொண்டவர்களாக வளர்க்கப்பட வேண்டியது ஒரு கட்டாயத் தேவையாகின்றது. எனவே அதற்கேற்றவகையில் இளஞ் சிறார்களுக்கு கல்வி ஊட்டப்படவேண்டியது மிக முக்கியமானதொன்றாகிறது. ஆகவேதான் எமது நாட்டின் மாணவர்களின் நலன் கருதி 'விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பை' உருவாக்கியிருக்கின்றோம்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பானது மாணவரின் கல்வியையும், அவர்களின் குறைநிறைகளையும் மிகவும் அவதானத்துடன் கவனித்து வருகின்றது கல்வி பயில்வதற்குச் சிரமத்தை எதிர்நோக்குகின்ற மாணவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது. தமிழீழ மாணவர் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக இது பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது; அவற்றிலே ஒன்றுதான் 'கல்வி வளர்ச்சிக் கழகங்கள்'.

கல்வி நிலையில் பின்தங்கிய கிராமங்கள் இனங்காணப்பட்டு, அங்கே இக் கல்வி வளர்ச்சிக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழீழத்தில் முப்பத்தாறு கல்வி வளர்ச்சிக் கழகங்கள் இயங்குகின்றன. இவற்றுள் இருபத்திரண்டு கழகங்கள் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மகளிர் பிரிவினால் நிர்வகிக்கப்படுகின்றன. இங்கே மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி வழங்கப்படுகின்றது. வறிய மாணவர்களுக்கு கற்பதற்குரிய உபகரணங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இடம்பெயர்ந்து, கல்வி பாதிப்புற்று அல்லலுறும் மாணவர்கள் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றனர். இரவு நேரங்களில் படிப்பதற்கென ஒளி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



வாராந்த நாட்களில் மூன்று அல்லது நான்கு நாட்களில் பாடசாலை நேரம் முடிந்த பின்னர் மாலை நான்கு மணியிலிருந்து ஆறு மணிவரை கற்பித்தல் நடைபெறுகின்றது. வார இறுதி நாட்களில் காலையில் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. பிரதானமாக ஆறு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன மாணவர்களின் அறிவாற்றலையும், கலையார்வத்தையும் வளர்க்கும் வகையில் பட்டிமன்றங்கள், பேச்சுப் போட்டிகள், கவிதைப் போட்டிகள் போன்றவை நடத்தப்பட்டு சிறந்த மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இங்கே கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்களைச் சந்தித்து, மாணவர்களின் குறை, நிறைகளைக் கேட்டறிகின்றனர் இவ்வாறான சந்திப்புக்களுக்காகவே பெற்றோர் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்குமிடையிலான சந்திப்புக்களின் போது ஒவ்வொரு பெற்றோருக்கும் அவர்களுடைய பிள்ளை கல்வி கற்கவேண்டியதன் முக்கியத்துவம் உணரவைக்கப்படுகின்றது.

## கீத்தா

கல்வி வளர்ச்சிக் கழகங்களில் பயிலும் மாணவர்கள் சிலரை நாம் சந்தித்தோம். அவர்கள் தம்மைப்பற்றி, தாம் பயிலும் கல்வி வளர்ச்சிக் கழகத்தைப்பற்றிச் சொன்னார்கள்.

''நாங்கள் இங்கே மிகவும் சுதந்திரமாகப் படிக்கின்றோம் தேவையான கேள்விகளையும் விளக்கங்களையும் தயக்கமில்லாமல் கேட்டுத் தெரிந்து கொள்ளுகின்றோம். ஆசிரியர்கள் மிகவும் அக்கறையுடன் எங்களுக்குப் படிப்பிக்கின்றார்கள்.''

என்று அவர்கள் கூறினார்கள்.

ஆனாலும் சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கல்வி வளர்ச்சிக் கழகங்களுக்கு அனுப்பத் தயங்குகின்றார்கள். கல்வி வளர்ச்சிக் கழகங்களில் பயிலவரும் மாணவர்களைப் பலவந்தமாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் இயக்கத்துக்கு எடுத்துவிடுவார்கள் என்று அவர்களிடையே நிலவும் தவறான கருத்தே இதற்குக் காரணம். கல்வி வளர்ச்சிக் கழகங்களை நாம் நிறுவிய தன் நோக்கம் வறிய மாணவர்களும் கல்வியில் மேம்படவேண்டும் என்பதேதவிர, இயக்கத்துக்கு ஆட்சேர்ப்பதல்ல.

பல பெற்றோர்கள் தமது பெண்பிள்ளைகளை இரவில் படிப்பதற்கு அனுப்பத் தயங்குகின்றார்கள். இந்தக் கல்வி வளர்ச்சிக் கழகங்கள் இரவில் படிக்கவரும் பெண்களுக்கு எந்த வகையிலும் ஊறு விளைவிக்காது என்பதை அந்தப் பெற்றோர்களுக்கு நாம் சொல்ல விரும்புகின்றோம். எந்த ஒழுங்கீனங்களுக்கும் இடம் தராதவகையில் கல்வி வளர்ச்சிக் கழகங்கள் இயங்கும். எனவே இரவிலோ, பகலிலோ இங்கே படிக்க வருவதற்கு யாருமே, யாருடைய பெற்றோருமே தயங்கவேண்டியதில்லை.

எத்தகைய போர்ச் சூழலிலும், எதிரியின் எத்தனையோ அழுத்தங்களின் மத்தியிலும் தமிழ் மக்களின் கல்விச்சிறப்பு சிறிதும் குன்றிடாது, மேலோங்குவதையே நாம் விரும்புகின்றோம். எம் மண்ணில் உருவாக்கப்படும் கல்விமான்களால் எம் மண் மேலும் வளம்பெறவேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம். அதற்காகவே விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு 'எழுத்தறிவிக்கும் பணியில்' இறங்கியுள்ளது.

# பெண்ணிய எழுத்தாளர் மரண மிரட்டல்களிடையே விடுதலை தேடுகிறார்

வங்காளதேசப் பெண்ணிய எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீன், தான் சிறைப்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காகத் தலைமறைவாகியுள்ளார். இசுலாத்தை இழிவுபடுத்தியதே அவர்மேலுள்ள குற்றச்சாட்டு. நண்பர்கள், மற்றும் செல்வாக்குள்ளவர்கள்மூலமாக தனது சுதந்திரத்தைப் பேண அவர் முயல்கிறார்.

''அவர் நாட்டினுள்ளே இருக்கின்றார். காவற்றுறையிடமிருந்து பாதுகாப்பான தூரத்தில் இருக்கின்றார். சிறைப்படுத்துவதான கட்டளையைத் திரும்பப்பெற முயல்கிறார்''

என்று காவற்றுறை அதிகாரி ஒருவர் கூறினார்.

''அவரைச் சிறைவைக்க முயல்கின்றோம். ஆனால் பலனளிக்கவில்லை''

என்கிறார் தம்மை இனங்காட்டிக்கொள்ள விரும்பாத அவ்வதிகாரி.

''மத அடிப்படைவாதிகள் தமது தீவிர பிடியைக் கைவிடமாட்டார்கள்''

என்றார் அவர். அவர்கள் (மத அடிப்படைவாதிகள்) தேசிய மட்டத்துக்கு இப் பிரச்சினையைக் கொண்டு சென்று, நஸ்ரீனைச் சிறைப் பிடித்து தூக்கிலிடவே சபதமெடுத்துள்ளார்கள்.

அவ்வதிகாரி பேசிய சில மணிகளின்பின் பத்தாயிரம் ஆர்ப்பாட்டக்காரர்கள் தலைநகர் டாக்காவின் தெருக்களில் திரண்டு,

''நம்பிக்கையற்றவருக்கு (நாத்திகருக்கு) மரணம்''

என்று கூவினார்கள்

''நாம் கேட்டது அவரின் மரணத்தை. அதற்குக் குறைந்த எதையுமல்ல''

என, ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களுள் ஒருவர் ஆர்ப்பரித்தார். இவர்கள் அனைவரும் வெள்ளிக்கிழமை பகல் தொழுகையின்பின் நகரின் பல்வேறு பள்ளிவாசல்களிலுமிருந்து வெளியேறித் திரண்டு சென்றனர்.

''தெருக்களில் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சேர்வதற்கு எந்த ஒரு பள்ளிவாசலும் விதிவிலக்கல்ல. இன்றைய ஆர்ப்பாட்டம் அமைதியானது. ஆனால் வன்மையானது''

என, பத்திரிகையின் படப்பிடிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

சுமார் பன்னிரண்டு மதகுருமார் டாக்காவின் பெரிய பள்ளிவாசலிலிருந்து ஒரு எதிர்ப்பு அணிக்குத் தலைமைதாங்கினர்.

''நஸ்ரீன் தப்பிப்போகும் எந்த நடைமுறையையும் நாம் அனுமதியோம் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் நாம் அதைச் செய்வோம்''

என்றார், ஒரு சமயப் பெரியார்.

நஸ்ரீனை ஆதரிப்பவை எனக் கருதப்பட்ட ஜனகாத்த புதினப்பத்திரிகை அலுவலகத்தையும் அன்று நடந்த கூட்டங்களையும் காவலிட அரசு நூற்றுக்கணக்கான காவற்றுறையினரைப் பயன்படுத்தியது.

கடந்த வாரம் மதவெறிகொண்ட குழுக்கள் ஜனகாத்த அலுவலகத்தை தாக்கின. காவற்றுறையினர் ரோப் சான், போர்கன் அகமத் ஆகிய இரு பத்திரிகாசிரியர்களை மூன்று நாட்களின்பின் கைது செய்தனர்.

வைத்தியராக இருந்து எழுத்தாளராக மாறிய, முப்பது வயது முடிவடைகின்ற நஸ்ரீன் சர்ச்சைக்குள்ளானார். அவர் இசுலாமிய புனித குர்ரானை முழுதும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கூறியதாக சல்கத்தாவிலிருந்து ஸ்ரேட்ஸ்மன் பத்திரிகை செய்தி வெளியிட்டபோதே, அவர் அதை மறுத்துள்ளார்.

வங்காளதேச ரைம்ஸ் இக்கட்டுரையை மறுபிரசுரம் செய்தபோது, அரசு நஸ்ரீனைச் சிறைப்படுத்துமாறு உத்தரவிட்டது. அத்தோடு இசுலாமிய அடிப்படைவாத குழுக்களின் ஆத்திரமும் தூண்டப்பட்டது.

நஸ்ரீன் வங்களாதேச நாடாளுமன்ற சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில் ஸ்ரேட்ஸ்மன் பத்திரிகை தம்மைத் தவறாகப் பிரசுரித்துள்ளதாக தெரிவித்தார்.

''குர்ரானிலுள்ள ஒரு வார்த்தையேனும் மாற்றப்படமுடியாது. எனக்கு அது நன்றாக தெரியும். அந்நூலில் மாற்றங்கள் பற்றி எதுவுமே எப்போதும் நான் கூறியதில்லை''

என அக்கடிதத்தில் நஸ்ரீன் கூறியுள்ளார்.

அவரின் 'லஜ்ஜா' (அவமானம்) என்னும் நூல் இசுலாமியரின் உணர்வுகளை கிலேசப்படுத்துவதாகவும், வங்களாதேசச் சிறுபான்மை இந்துக்களின் துன்புறுத்தல்கள்பற்றிப் பொய்களைப் புனைந்துள்ளதாகவும் தெரிவித்து அந்நாட்டு அரசு அந்நூலை தடைசெய்துள்ளது.

நன்றி: ISLAND

# பெண் கல்வியும் குழந்தை வளர்ப்பும்

சுதாமதி

குழந்தை ஒன்றிடத்து ஏற்படும் பதிவுகள் நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடியவை. இளம்பருவத்தில் ஒருவனது குணங்களை உருவாக்கி, ஒருவனது கடைசி நிமிடம்வரை இந்தப் பதிவுகள் அவனைத் தொடர்கின்றன. எனவே, ஒரு தாய்க்குள்ள பொறுப்பு மிகவும் பெரியது. தொட்டிற்ப்பருவத்து பதிவுகள், பழக்கங்கள் சீரிய ஆன்மீகப் பதிவுகளாக அமைகின்றனவா என்பது குறித்து அவள் கருத்துச் செலுத்த வேண்டியவளாகிறாள். குழந்தையின் இயல்பான ஆற்றல்களை வளர்க்கக்கூடிய விதத்தில், ஆளுமைகளை விருத்தி செய்யக்கூடிய விதத்தில், குழந்தை ஒன்றின் எதிர்காலத்தினை நிர்ணயிப்பதில் தாய் முக்கிய பங்காற்றுகிறாள்.

இந்தவகையில் பெண்கல்வி என்பது முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டிய ஒன்றாக, சமுதாயத்தின் ஒட்டுமொத்தவளர்ச்சிக்குத் தேவையான ஒன்றாக அமைகிறது. இத்தகைய சமுதாயவிருத்திக்கான கல்விப்பரப்பு, பெண்களைப் பொறுத்தவரை எவ்வளவுதூரம் தனது செல்வாக்கினைச் செலுத்தியிருக்கிறது, பெண் கல்வி எந்தளவுக்கு சமுதாயத்திலே முக்கியப்படுத்தப்படுகிறது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இங்கு கல்வி என்னும் நோக்கிற் குறிப்பிடப்படுவது ஏட்டுக்கல்வியோடோ, அன்றி பாடவிதானங்களுக்குள் மட்டும் அமையும் கல்வியோடோ நிற்காது. இது பரந்த அடிப்படையிலான எண்ணக்கருவைக் கொண்டது.

கல்வி என்பது ஒருவனது ஆளுமையை வளர்ப்பதாய், வாழ்க்கையை நெறிப்படுத்துவதாய் அமையும். அதுவே உண்மையான கல்வியாய் அமைகிறது.

கல்வித்துறையில் பால்பாகுபாடு நீண்டகாலமாகவே இருந்துவருகின்றது. சென்ற நூற்றாண்டில் பெண்களும் ஆண்களும் சேர்ந்து பயில்வதற்கு தீவிரமான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது, பெண்களினதும் ஆண்களினதும் உடல் உள அமைப்பு, தொழிற்பாடுகளில் வேறுபட்டவை. இதன் காரணமாக உள ஆற்றல்கள் வேறுபட்டவை. எனவே அவர்கள் ஒரே பள்ளியில் இணைந்து கற்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்று கருதப்பட்டது. இன்றும்கூட பெண்களின் கல்வி தீவிர அக்கறை செலுத்தப்படவேண்டிய ஒன்றாகவே இருக்கிறது. குறைந்த ஒத்துழைப்புக்களின் நடுவில் அவர்கள் கற்பிக்கப்படுகின்றனர். ஆண்களைவிடக் குறைவாகவே கல்வி பெறுகின்றனர். பிள்ளைகள் வளரவளர, பெண்மையோடு ஒப்பிடும்போது ஆண்களுடன் தொடர்புடைய இயல்புகளுக்கே சமூக அந்தஸ்தும் கௌரவமும் வழங்கப்படுவதை அவர்கள் உணர்வதாக ஆய்வுகள் கூறுகின்றன.

பிள்ளைகளைச் சமூகமயப்படுத்தும் செயற்பாடு, அவர்களை வளர்க்கும் முறைகளினூடாகக் குடும்பத்திலிருந்தே ஆரம்பிக்கிறது. இது கல்வியின் மூலம் வலுப்படுத்தப்படுகிறது. சமூகத்திலுள்ள ஒவ்வொரு பெண், ஆண்களிடையே வேறுபட்ட விளைவுகளை ஏற்படுத்துவதாகவுள்ளது. கல்வியானது அறிவையும், திறன்களையும் நல்மனப்பாங்குகளையும் மக்களுக்கு வழங்குகிறது. சான்றுப்பத்திரங்களும், பரீட்சைகளும் இவற்றுக்கு அந்தஸ்தை வழங்குகின்றன. அத்தோடு கல்வி குடும்பத்துக்கும், தொழில் சந்தைக்கும் இடையேயான ஒரு நிறுவனமாகத் தொழிற்பட்டு, பெண்- ஆண் இருபாலரினதும் திறமைகளை நெறிப்படுத்துவதற்கும் உதவுகின்றது.

எடுத்துக்காட்டாக 1970 களின் பிற்பகுதியில் பயன்படுத்தப்பட்ட ஆங்கிலப்பாட நூல்கள் விக்டோரியன்கால மத்திய வகுப்புக் குடும்ப வாழ்க்கையையே படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்தன, ஆண்களின் பங்கு பெரும் கௌரவமாகவும் மதிப்புள்ளதாகவும் அமைய, பெண்களும் பெண்பிள்ளைகளும் ஆண்களுக்கு அடுத்தபடியாகவே குடும்ப வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றனர். எடுத்துக்காட்டாக ஆண்கள் வெளிவேலை செய்பவர்களாகவும், மாலையில் பத்திரிகை வாசிப்பவர்களாகவும் இருக்கையில் பெண்கள் பெரும்பாலும் இல்லத்தலைவியாகவும் உணவு, தேநீர் தயாரிப்பவர்களாகவும் ஈடுபட்டிருந்தனர் அதே எடுத்துக்காட்டில் ஆண்பிள்ளைகள் வாசிப்பவர்களாவும், பெண்பிள்ளைகள் வீடுவாசல் கூட்டுபவர்களாகவும் அல்லது பொம்மையுடன் விளையாடுபவர்களாகவும் காணப்பட்டனர்.

இவ்வாறான எண்ணங்களும் சிந்தனைகளும் பெண்பிள்ளைகளைத் தாழ்வுமனப்பான்மை உள்ளவர்களாகவும், சார்ந்துவாழும் தன்மைகளைக் கொண்டிருப்பவர்களாகவும் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு ஏதுவாக்கியதுடன், சமூகஉறவில் தம்மைப் பற்றிய எதிர்மறையான எண்ணக்கருத்தை வளர்க்கச் செய்தன. கல்வியை மேலும் தொடர்வதிலும் தொழில்களைத் தெரிவு செய்வதிலும் இவ்வகையான சிந்தனை செல்வாக்குச் செலுத்தியது.

இடைநிலைப் பாடசாலைகளில் இடம்பெறும் தொழில்நுட்ப செயல்முறைப் பயிற்சி நெறிகளில் இவ்வாறான பால் வேறுபாட்டு அம்சங்களை வெளிப்படையாகக் காணமுடிகிறது. மரவேலை, உலோகவேலை போன்ற பாடங்கள் ஆண்களுக்கும், மனைப்பொருளியல், நெசவு போன்ற பாடங்கள் பெண்களுக்கும் கொள்கைரீதியாக அல்லது மரபுவழியாக ஒதுக்கப்பட்டுள்ளன.

குறைவான விருத்தியும், வேலையின்மைப் பிரச்சினையும் உள்ள மூன்றாம் உலக நாடுகளில், கொள்கைவகுப்போர் கல்வியைத் தொழிற் சந்தையோடு இணைப்பதில் அதிக அக்கறை செலுத்தினர். கல்விமட்டும் தனித்துச் சுயமாக வேலைவாய்ப்புக்களை உருவாக்கிவிடமுடியாது. சமுதா

(11 ம் பக்கம் பார்க்க)

# பெண்ணை மதிப்போம்

கொற்றவை

இரண்டுவருடங்களுக்கு முன் அந்தப் பெண்ணினுடைய மரணவீட்டில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். அது ஒரு வித்தியாசமான மரணமாக, யாரையும் உருக வைக்கின்ற துன்பம் நிறைந்த தற்கொலைச் சம்பவமாக நடந்து முடிந்திருந்தது. மரணவீட்டுக்கு வந்திருந்து அனுதாபம் தெரிவித்தவர்கள், அந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் பலரும் அந்தப் பெண்ணினுடைய முடிவை நொந்து, பலவாறாகத் தங்களுக்குள் அனுதாபம் தெரிவித்துக்கொண்டனர். அன்றைய பத்திரிகைகளிலும் இவ்விடயம் பரபரப்பாகப் பேசப்பட்டது. திருமணக்கோலத்தில் கூறைச் சேலையுடன் கொழும்பு கோல் பேஸ் கடற்கரையில் ஒதுங்கிய பெண்ணின் சடலமும் அது பற்றிய விசாரணைகளுமாக கடற்கரை அல்லோலகல்லோலப்பட்டது.

புங்குடுதீவைச் சேர்ந்த அந்தப் பெற்றோர், கனடா மாப்பிள்ளைக்குத் தம் ஒரே மகளைத் திருமணம் செய்து வைத்தனர். சொத்துக்கள், பணமாக கொழுத்த சீதனத்துடன் மனப் பொருத்தங்கள் தவிர பார்க்கவேண்டிய ஏனைய பொருத்தங்கள் யாவும் பார்த்து, கொழும்புக்கு தம் பெண்ணை அனுப்பி வைத்தனர். மணமகன் கனடாவிலிருந்து கொழும்புக்கு வந்து திருமணம் செய்துகொண்டான். பெண்ணுக்குப் பெற்றோரே நிச்சயித்த திருமணம். பிள்ளைக்கு நல்வாழ்வையே பெற்றோர் ஏற்படுத்தித் தருவார்கள் என்ற அபாரநம்பிக்கையில் பெண்ணும் சம்மதித்துச் செய்யப்பட்ட திருமணம்.

ஆனால் பின்னர் நடந்ததோ....
அந்தப் பெண் ஒருவாரகாலம் வாழ்ந்த திருமணவாழ்வோடு தன் வாழ்க்கையின் முடிவைத் தேடிக்கொண்டாள்.

அந்தக் கணவன் ஏற்கனவே கனடாவில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்தவன் என்றும், சீதனத்துக்காகவே இவளைத் திருமணம் செய்துகொண்டதாகவும் தன்னை வெளிப்படுத்தினான். இதனால் அந்தப்பெண் மனமுடைந்து, விரக்தியுற்ற நிலையில் இந்த முடிவைத் தேடிக்கொண்டாள். ஒருவாறு முயற்சிசெய்து பெண்ணினுடைய சகோதரன், மணமகனுக்கு கொடுத்த சீதனங்கள், சொத்துக்களை மீளவும் பெற்றுக்கொண்டான்.

இது உண்மையாக நடந்த சம்பவம். சீதனத்துக்காக ஒரு பெண்ணின் திருமண வாழ்வை, அவளது வாழ்க்கைக் கனவுகளைச் சிதைத்து, அவளைத் தற்கொலை செய்யவைத்த சம்பவம். இவ்வாறு எத்தனையோ சம்பவங்கள் சீதனத்தின் கொடூரத் தன்மையால் நிகழ்ந்தன. அவை ஒரு வகையில் மூடிமறைக்கப்பட்டன; அல்லது திரித்துக் கதைபரப்பப்பட்டன.

எமது சமுதாயத்தின் மத்தியில் சீதனத்தின் தாக்கம் இத்தகைய துன்பம் நிறைந்த மரணங்களுக்கு, பெண்ணின் மனோரீதியான தாக்கங்களுக்கு வழிகோலியிருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்:

இவ்வாறான பெருந்தொகையான சீதனம் வழங்கப்பட்டு பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டு நடைபெறும் திருமணவாழ்க்கைகூட, இவ்வாறான நிலையில் போகும்போது இதில் பாதிக்கப்படுவது முழுக்க முழுக்கப் பெண்ணேயாவாள்.

இவ்வாறான திருமணங்களில் பெண்ணின் எதிர்காலம் பாதிக்கப் படுவதும், கேள்விக் குறியாகிப்போவதும் கண்டும் இன்னும் கொழும்பு மணமகனையும் கனடா மாப்பிள்ளையையும் தேடிப்போகும் பெற்றோர்களின் தன்மைகளை அனுபவ அறியாமை என்பதா, அந்தஸ்தென்ற போலிப் போர்வையில் ஏற்பட்ட மோகமென்பதா என்பதை அறியமுடியாத நிலையிலுள்ளது. தமது பிள்ளைகளின் வாழ்வுக்கு தாமே குழிபறிப்பவர்களாக பெற்றோர்கள் இருக்கிறார்கள் என்பது வருந்துவதற்கு உரிய விடயம்.

இங்கிருந்து போகும் பெண்களும் கொழும்பில், திருமணப்பதிவுகளை மேற்கொண்ட நிலையில் பிரயாண ஒழுங்குகள் தாமதமாகும் நிலையினால் வருடக்கணக்காக, விடுதிகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கி வாழ்கின்றனர்.

இத் திருமணப் பதிவுகளிலே புகைப்படங்களைப் பார்த்துத் திருப்தியுற்ற நிலையில் நடைபெற்றவை அநேகம். மணமகனை மணமகளோ, மணமகளை மணமகனோ முன்பின் அறியாது இருவரது புகைப் படங்களை மட்டும் பார்த்துச் சம்மதித்த நிலையில், சீதனக் கையளிப்புக்கள் மத்தியில் இவை நடைபெற்றவை. இங்கிருந்து பெற்றோரால் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டு மணமகனைத் திருமணம் செய்யவெனச்சென்ற பெண்கள், (பாங்கொக்கில்) வருடக்கணக்காக நிற்கின்றனர். இப்படிச் சென்ற பல பெண்கள் தமது ஊருக்கும் திரும்ப முடியாது, வெளிநாடுகளுக்கும் செல்ல முடியாது, இழுபறிப்பட்ட நிலையில் பெரும் நிர்க்கதிக்குள்ளாகி வாழ்கின்றனர்.

இவ்வாறு மணமகனைப்பற்றி அறியாது, அவனது குணநலன்களைப்பற்றி அறியாது திருமணம் நிச்சயம் செய்து ஏமாற்றப்பட்ட இன்னும் ஒரு பெண்ணினைப் பற்றிய மற்றொரு சம்பவம் இது.

பெற்றோர் நிச்சயித்தபடி ஒரு சிங்கப்பூர் மணமகனுக்கு இங்கிருந்து தமது பெண்ணைப் பெற்றோர் அனுப்பினர். சிங்கப்பூரிலேயே திருமணம் செய்வதாக மணமகன் வாக்குறுதி அளித்திருந்தான். இந்நிலையில் பெண்ணினுடைய புகைப்படத்தைப் பார்த்ததைக்கொண்டு மணமகன் திருமணத்துக்குப் பூரண சம்மதம் அளித்திருந்தான். பெண்ணை நேரில் மணமகன் பார்க்கவில்லை. மணமகள் திருமணம் செய்வதற்காக இங்கிருந்து சிங்கப்பூருக்குச் சென்றாள். ஆனால் நிகழ்ந்தது?

பெண் சிங்கப்பூரைப் போய் சேர்ந்ததும் மணமகன், தனக்குப் பெண்ணைப் பிடிக்கவில்லை எனத் திருப்பி அனுப்பிவிட்டான். தற்போது பெண் மனமுடைந்தநிலையில் யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டாள். இது மனோரீதியாகப் பாதிக்கப்பட்ட பெண்ணின் கதை. இப்படிப் பாதிக்கப்பட்ட எத்தனை பெண்கள் தங்கள் ஏமாற்றங்களை தங்களுக்குள் ஆழப்புதைத்துத் துக் கொண்டு வாழ்கிறார்கள்?

ஒரு பெண்ணின் விருப்பங்கள், ஆளுமைகள் மதிக்கப்படாது, சந்தையில் பொருள் ஒன்று பேரம் பேசப்படுவதுபோல நடைபெறும் இத் திருமண நிகழ்வுகள் சமுதாயத்தை எந்த நிலைக்கு கொண்டுசென்றுவிடப்போகின்றன, பெண்ணை எவ்வளவு தூரம் மனச்சிதைவுக்கு ஆளாக்கப்போகின்றன என்பதை நாம் ஆழமாகச் சிந்திப்போம்.

கொழும்புமோகமும் வெளிநாட்டு மணமகனைத் தேடலில் அவாவினையும் கொண்டிருக்கும் பெற்றோர், தம் பெண்ணை முகமறியாத, குணங்கள் பற்றித்தெரியாத ஒருவனுக்கு மணமுடித்துக் கொடுப்பதானது எத்தகைய நன்மை கருதி என்பது தெரியவில்லை.

எனவே இத்தகைய பிற்போக்குத்தனமான, பெண்ணின் வாழ்வுக்கு தீங்குதரக்கூடிய திருமணமுறைகளைத் தவிர்த்து பெண்ணும் ஆணும் பரஸ்பரம் புரிந்துணர்வுகொண்ட திருமண முறைகளை செய்வதை சமுதாயத்தின் நன்மையாகக் கருதுவோம், ஒரு பெண்ணுக்கு மதிப்புக் கொடுக்காத, அந்தஸ்து வழங்காத எந்தவொரு சமுதாயமும் மேம்பட்டதாக வரலாறு இல்லை,

(11ம் பக்கம் பார்க்க)

Nallur Branch Library




"இதுதான் என்ரை கடைசிச் சண்டையாக இருக்கும். நான் செத்தா இந்த யூனிபோஃமைத்தான் என்ரை பொடிக்குப் போடவேணும்"

தனது புதிய வரிச் சீருடையை மடித்தபடி கூறினாள் உஷா. எல்லோரும் அவளையே பார்த்தவண்ணம் நின்றனர். உஷா கொக்காவில் இராணுவத் தளம் மீதான தாக்குதலுக்குச் செல்லத் தயாராகிக்கொண்டிருந்தாள்.

எங்கள் உஷா!

அவள் ஓர் உற்சாகம் மிகுந்த கலகலப்பான போராளி. அவளிருக்கும் இடத்தில் கலகலப்புக்கும் சின்னச் சின்னக் குறும்புகளுக்கும் பஞ்சமில்லை. அவளைச் சுற்றிக் கொஞ்சப் போராளிகள் கூட்டம் ஒன்று கலகலத்தபடி திரியும்.

இந்திய இராணுவம் எமது மண்ணில் மூலை முடுக்கெல்லாம் நுழைந்து வேரூன்றிப்போயிருந்த காலம் அது. புலிகளின் காட்டு வாழ்க்கை மிகவும் கடினமானது. சொல்லொணாத் துன்பங்கள் நிறைந்தது. தமக்கு வேண்டிய சகல தேவைகளையும் மிகுந்த நெருக்கடிகளின் மத்தியில்தான் பெற்று வாழ்ந்த காலம்.

அந்தக் கடினமான வாழ்க்கைக் காலப் பகுதியிலும் உஷா உற்சாகமாகத் திரிந்தாள். இருபது அடிகள் ஆழத்துக்கும் அதிகமான ஆழக் கிணறுகளைத் தாங்களே தோண்டும்போது, வேலை செய்த களைப்புத் தெரியாமல் இருக்க உஷா பாடல்கள் பாடுவாள். அவளது பாடல்களில் மெல்லிய சோகம் ஒன்று இழையோடி, ஆழ்ந்து அனுபவிக்கக்கூடியதாக இருக்கும். அவள் தனது பாடலை மேல் சுருதியில் கொண்டுபோய் முடிக்கும்போது. எல்லாப் போராளிகளுமே அவ்விடத்தில் உறங்கிப்போயிருப்பார்கள். இது உஷாவின் பாட்டின் சக்தியோ, அல்லது வேலைக் களைப்புமிகுதியோ என்பதைத் தெளிவாக வரையறுத்துச் சொல்லமுடியாது. பின்னர் மீண்டும் எழுந்து வேலையைத் தொடர்வார்கள்.

இனிமையாகப் பாடக்கூடிய உஷாவின் வாயிலிருந்து பெரும்பாலும் 'ஒரு கூட்டுக்கிளியாக...' என்ற பாடல்தான் வரும். இறந்துபோன தனது ஒரே ஒரு அண்ணனை நினைத்து, இந்தப் பாடலை அவள் பாடுவாள்.

1985 ஆம் ஆண்டு .....

விடுதலைப் புலிகள் மகளிர் படையணி தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல் செயற்பட்ட காலம் ...

இந்தக் காலப் பகுதியில்தான் அவள் தன்னை இயக்கத்தோடு இணைத்துக்கொண்டாள். அப்போது அவளது குடும்பம் பொருளாதார நெருக்கடியால் வாடிக்கொண்டிருந்தது. ஆனாலும் வீட்டிக்கு வருவோரையும் போராளிகளையும் உஷா உபசரித்துக் கொண்டுதான் இருந்தாள். இவர்களுக்கென்று சொந்தமாக இருந்த காணியிலிருந்து கிடைக்கும் தேங்காய்கள், பழங்களை விற்றே இவர்களது வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. தாயை இழந்த அவளது குடும்பப் பொறுப்பை அவளின் ஒரேயொரு அண்ணனும் தந்தையும் பொறுப்பேற்று வாழ்ந்தபோது அவள் செல்லமாகத்தான் வளர்ந்தாள்.

குழந்தைகளோடு குழந்தையாக, உற்சாகமாகத் திரிவதில் அவளுக்கு அலாதியான விருப்பம்.

'அக்கா, அக்கா' என்றபடி அவளைச் சுற்றி ஊரிலுள்ள குழந்தைகளெல்லாம் திரியும். ஊர்ப் புழுதிகளை அளைந்தபடி திரியும் குழந்தைகளை-அது யாருடைய குழந்தையாக இருந்தாலும் சரி-தூக்கி வந்து குளிப்பாட்டுவது அவளுக்கு உற்சாகமானதொரு பொழுதுபோக்கு. தாய்மார் தங்களது குழந்தைகளைக் காணவில்லையே என்று தேடித் தவித்துக்கொண்டிருக்கும்போது, அந்தக் குழந்தைகள் உஷா வீட்டுக் கிணற்றடியில் குளித்துக்கொண்டிருக்கும்.

படிப்பில் மிகவும் கெட்டிக்காரியாகவும், கலை நிகழ்ச்சிகளிலும் சிறந்து விளங்கிய இவள் ஒருமுறை இவர்களது பாடசாலையில் நடைபெற்ற சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றாள். ஒவ்வொரு முறையும் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பரிசில்களை இவளே தட்டி வந்தாள். நீச்சலிலும் இவள் சளைத்தவள் அல்ல.

இதே காலகட்டத்தில்தான் சிங்கள இனவாத அரசின் பிடியால் அல்லல்பட்ட தென் தமிழீழ மக்களை உஷா சந்தித்தாள். இவளின் கிராமத்தில் தங்கியிருந்த இடம் பெயர்ந்த மக்களிடம் சென்று அவர்கள் அனுபவித்த துன்பங்களைக்கேட்டு அறிந்துகொண்டாள். அவர்களுக்குத் தன்னாலான உதவிகளையும், ஆறுதல் மொழிகளையும் வழங்கினாள். இயக்கத்தைப்பற்

## கப்டன் உஷா



வனிதாம்பிகை இராசையா
3-ம் வட்டாரம், முள்ளியவளை.
பிறப்பு. 1967 - 10 - 20
வீரச்சாவு: 1990 - 07 - 13

றிச் சிறுவர்களிடையே எடுத்துரைத்தாள். தானும் இணைந்து கொண்டாள்.

அப்போது மக்கள் எமது போராட்டத்தைப் பற்றி முழுமையாக விழிப்படையாத நேரம். பெண்கள், சமூகத்தின் மிக மோசமான பிடிக்குள் அடக்கி ஒடுக்கப்பட்டநேரம், பன்னிரெண்டு பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து தம்மை இயக்கத்தில் இணைத்துக்கொண்டனர். அவர்களுள் உஷாவும், லெப். துர்க்காவும் அடங்குவர்.

இவர்கள் பயிற்சிக்காக இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்கள் பயணித்த படகுகள் இந்தியக் கரையை அண்மித்ததும், இவர்களை அழைத்துச் சென்ற ஆண் போராளிகளுள் ஒருவர், "சரி இதுக்குள்ள எல்லோரும் இறங்குங்கோ" என்று கூறியதும் நீச்சலில் கெட்டிக்காரியான உஷாவே முதலில் கடலில் இறங்கினாள்.

மிகவும் திறமையாகவே தனது பயிற்சியை முடித்த இவளுக்கு எம்-16 ரகத் துப்பாக்கி கொடுக்கப்பட்டது. இந்தியாவில் தனது ஆரம்பப் பயிற்சியை முடித்த உஷா கரும்புலிகளுக்கான பயிற்சியையும் மருத்துவப் பயிற்சியையும் பெற்று, சில காலம் மருத்துவப் பிரிவில் இருந்து போராளிகளைப் பராமரித்து வந்தாள்.

உஷாவுக்கு நாடகம் நடிப்பதென்றால் மிகவும் பிரியம். பாத்திர உணர்வுடன் நடித்துக் காட்டுவாள். ஒருமுறை நாடகமொன்றில் குண்டர் படையில் ஒருவராக வந்து தமிழர்களைத் துன்புறுத்தும் வேடத்தில் திறமையாக நடித்தாள். அவளது உடற்தோற்றத்துக்கும், நடிப்புத்திறனுக்கும் அமைய, அன்றிலிருந்து உஷா "நீக்ரோ"வாக மாறினாள்.

இந்திய ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான எமது போர் ஆரம்பமானது. இவளின் காலடிச்சுவடுகள் பதியாத இடமே எம் மண்ணில் இல்லை எனலாம். நாவற்குழி பரந்த வெளியில் வீசும்

## ★ பூமாதேவி ★

காற்றும், நெல்லியடியில் நிமிர்ந்து நிற்கும் சட்டிடங்களும், மன்னாரில் அடர்ந்து வளர்ந்த காட்டுமரங்களும் இவளின் வீரச்செயல்களைப் பறைசாற்றும். இந்திய ஆக்கிரமிப்பாளரை விரட்டியடித்ததில் இவளது பங்கைப்பற்றிக் கதை கதையாகக் கூறும்.

கிணறுகள், பதுங்குகுழிகளை வெட்டும்போது மற்றவர்களுடன் போட்டி போட்டே செய்வாள். "போட்டி இருக்கலாம். பொறாமைதான் இருக்கக்கூடாது பிள்ளையள்" என்று அடிக்கடி கூறும் உஷா சக போராளிகளுடன் இணைந்து கடினமான காட்டு வாழ்க்கையை அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் கழித்தாள்.

'அக்கா, அக்கா' என்றபடி அவளைச் சுற்றி ஊரிலுள்ள குழந்தைகளெல்லாம் திரியும். ஊர்ப் புழுதிகளை அளைந்தபடி திரியும் குழந்தைகளை-அது யாருடைய குழந்தையாக இருந்தாலும் சரி-தூக்கி வந்து குளிப்பாட்டுவது அவளுக்கு உற்சாகமானதொரு பொழுது போக்கு. தாய்மார் தங்களது குழந்தைகளைக் காணவில்லையே என்று தேடித் தவித்துக்கொண்டிருக்கும் போது, அந்தக் குழந்தைகள் உஷா வீட்டுக் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருக்கும்.

இந்த நேரத்தில்தான் இவளின் உயிருக்குயிரான அண்ணன் பேருந்து விபத்து ஒன்றில் உயிரிழந்த செய்தி உஷாவின் காதுகளை எட்டியது. ஏற்கனவே அம்மா அப்பாவையும் இழந்த நிலையில், தனது குடும்பத்தின் ஒரேயொரு ஆதரவான அண்ணனும் இறந்ததையிட்டு மனம் கலங்கினாலும், மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு, அமைதியாக இருக்கப் பழகிக் கொண்டாள்.

1990இல் மீண்டும் சிறீலங்கா இனவாத அரசுக்கு எதிரான போர் ஆரம்பமானது. அப்போது கற்கோவளப் பகுதியில் காவற் பணியில் ஈடுபடும் புதிய போராளிகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டாள் உஷா. அவர்களுக்குத் தமது போராட்ட அனுபவங்களையும், எதிரியுடன் எப்படிப் போரிடவேண்டும் என்பதையும் அடிக்கடி சொல்லிவைப்பாள்.

அதன்பின்னர் பலாலியைச் சுற்றி எம்மவர்களால் அமைக்கப்பட்ட காவல் அரண்களுள் ஒரு பகுதியில் இவளின் குழு நின்றது.

ஒரு நாள் இவளுக்கு மேல் உள்ள பொறுப்பாளர் வந்து "உஷா, அங்கால பக்கத்துச குறூப், மதில் ஒன்றை உடைச்சிட்டாங்க. நீங்களும் குறிப்பிட்ட நேரத்துக்குள்ள இந்த மதிலை

(11-ம் பக்கம் பார்க்க)

# வீர தீர விளையாட்டுக்கள் உலகில் இரு இளம் புயல்கள்



மக்களின் நடுவே யமுனாவும் மாலாவும்

தமிழீழத்தின் முதலாவது அதி பாரந் தாங்கும் வீராங்கனைகள் இம் மாத நடுப் பகுதியில் தமது முதலாவது சாதனையை நிலை நாட்டினார்கள்.

வடமராட்சியிலுள்ள பொலிகண்டி என்னும் இடத்தில், பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழக மைதானத்தில் இச் சாதனை நிகழ்த்தப்பட்டது. பொலிகண்டியைச் சேர்ந்த மாலா அமிர்தநாதர் (பத்தொன்பது வயது), யமுனா தங்கவேலாயுதம் (இருபது வயது) என்ற இரு இளம் யுவதிகளும்தான் மேற்படி சாதனையைச் செய்த பெருமைக்குரிய வீராங்கனைகள் ஆவர்.

இவர்களில் ஒருவர் உழவு இயந்திரத்தையும், மற்றவர் எல்ஃப் ரக வாகனத்தையும் தமது உடலின் மேலே ஏற்றினார்கள். இது போன்ற வீர தீர விளையாட்டுக்கள் தமிழீழத்தில் இதுவரைநாளும் ஆண்களாலேயே நடத்தப்பட்டு வந்தன. இப்போதுதான் முதன் முதலாக இரு பெண்கள் இத் துறையில் இறங்கியுள்ளனர்.

பெண்கள் தமது மன வலிமையாலும் உடல் பலத்தினாலும் எத்தகைய கடினமான வேலைகளையும் செய்யமுடியும் என்பதை, பெருந்தொகையான மக்கள் மத்தியில் சாதித்துக் காட்டிய மாலாவையும், யமுனாவையும் நாம் எமது பத்திரிகையின் சார்பில் நேர்முகம் கண்டோம்.

இருவருமே அதிக உயரமோ, பருமனோ அல்லாத, சராசரியான உடல்வாகு கொண்டவர்கள். இவர்களால் எப்படி அதி பாரங் கொண்ட வாகனங்களைத் தம்மீது ஏற்ற முடிந்தது என்பதை எண்ணும்போது, பிரமிப்பாகத்தான் இருந்தது. அவர்கள் செய்தது சாதனைதான் என்பதில் யாருமே எள்ளளவேனும் ஐயுற முடியாது. எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நிலத்தில் படுத்து, வாகனம் தம் உடலின்மேல் ஏறிக் கடந்ததும் துள்ளி எழுந்து, பலத்த கை தட்டல்களுக்கு மத்தியில் தம் குருவின் கரங்களைப் பற்றிக் குலுக்கி ......

நம்புவதற்குச் சற்றுக் கடினமாக இருந்தாலும், எல்லோருக்கும் நம்புவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

இரண்டு சிறு பெண்களுக்கு எப்படி இது சாத்தியமானது?

"எல்லாமே மன உறுதியிலும் பயிற்சிகளிலும்தான் தங்கியிருக்கின்றது. ஏறத்தாழ இரண்டு மாத காலம் பளு தூக்கும் பயிற்சிகள், மூச்சை இழுத்து வைத்திருக்கும் பயிற்சிகள், உடலின் தசைகளை இறுக்கிப் பிடிக்கும் பயிற்சிகள் என்பவற்றைச் செய்தோம். 'சான்டோ' துரைரட்ணம் அவர்களும் 'சான்டோ' செல்வராஜா அவர்களும் எமக்குப் பயிற்சி அளித்தார்கள். மிகக் கடுமையாகப் பயிற்சி எடுத்ததால் எளிதாக எம் மீது வாகனத்தை ஏற்ற முடிந்தது"

என்றார்கள் மாலாவும் யமுனாவும் சிரித்தவாறு.

"வாகனம் உங்கள் மீது ஏறும்போது உங்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்படாதா?"

"இல்லை. வாகனம் எம்மீது ஏறும்போது மூச்சை உள்ளே இழுத்து உடலின் தசைகளை மிக இறுக்கமாக வைத்திருப்போம். அதனால் வாகனம் ஏறி இறங்குவதே எமக்குத் தெரிவதில்லை. வாகனம் எம்மைக் கடந்த பின்னர்தான் இழுத்து வைத்திருந்த மூச்சை வெளியே விடுவோம். வாகனம் எம்மீது ஏறிக்கொண்டிருக்கும்போது மூச்சை விடுவோமானால் மரணம் நேரும் அபாயம் உண்டு."

"இத்தகைய அபாயமான விளையாட்டில் எப்படி உங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது?"

"கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக எங்களூர் இளைஞர்கள் இவ் விளையாட்டில் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றார்கள். அவர்கள் செய்வதைப் பார்த்துப் பார்த்து எங்களுக்கும் ஈடுபாடு வந்துவிட்டது. "நாங்களும் செய்யப் போகின்றோம்" என்று அவர்களிடம் கேட்கத் தயக்கமாக இருந்தது. யாராவது எங்களைக் கூப்பிடமாட்டார்களா என்று நீண்ட நாட்களாகக் காத்திருந்தோம்.


இரண்டு மாதங்களுக்கு முன் எங்கள் இருவருடைய அண்ணன்மார்களும் எங்களிடம்,

(11-ம் பக்கம் பார்க்க)

மலையமான்:தேவி



தன் உடலின்மேலே எல்ஃப் வாகனத்தை ஏற்றும் மாலா



உழவு இயந்திரத்தைத் தன்மேல் ஏற்றும் யமுனா

Nallur Branch Library

# பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்

## - நூல் அறிமுகம் -

பிரேமா அருணாசலம் அவர்களின் 'பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்' என்ற நூல் தொல்காப்பியர் முதல் சித்தர்வரை பெண்களின் சித்தரிப்புக்களை விளக்கியுள்ளது. 1993-ம் ஆண்டு ஆனி மாதம் வெளியிடப்பட்ட இந்த நூலுக்கு சென்னையைச் சேர்ந்த பெண்ணியவாதியான மைதிலி சிவராமன் அணிந்துரைவழங்க, தென்னாசியப் பொத்தக நிறுவனத்தினர் (South Asian Fooly) வெளியிட்டுள்ளனர்.

இன்று பெண்கள் பலபல துறைகளில் முன்னேறிக் கொண்டிருந்தாலும், காதலிக்கப்பட்டபின் கைவிடப்படல், சீதனக்கொடுமை என்பனவும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் காலாகாலமாகப் பெண்கள் பற்றி நிலவிவரும் சமூதாய மூடநம்பிக்கைகளும், மதக் கோட்பாடுகளும்தான். பெண்கள் பற்றிய இந்தச் சிந்தனை ஆணாதிக்க சமூகத்தாலேயே வேரூன்றப் பட்டுள்ளது. ஆணே வீட்டையும் நாட்டையும் ஆள, பெண் அவன் கைக்குள்ளேயே இருக்கவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகின்றாள்.

இதை நூலாசிரியர் மிகவும் அழகாக ''சந்தனம் மலையில் பிறந்தாலும் அம்மியில் மசிந்துதான் ஆகவேண்டும் என்ற சிந்தனையே பெண்ணுக்குப் போதிக்கப்பட்டுவந்துள்ளது'' என்று கூறுகிறார்.

சங்ககால இலக்கியங்கள் பலவும் அச்சம், மடம், நாணம் என்று சொல்லப்படுகின்ற அறியாமை, கற்பு, ஒழுக்கம், பொறுத்துப் போதல் என்பன எப்பொழுதும் பெண்களிடம் இருக்கவேண்டிய நற்குணங்கள் என்று கூறுகின்றன. உதாரணமாக தொல்காப்பியர் கூறுகின்றார்.

''அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய"
(தொல் . பொ-96)
என்றும்,

''உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செய்தீர் காட்சிக் கற்புச் சிறந்ததன்று''
(தொல்.பொ-111)
என்றும் கூறுகிறார்.

தொல்காப்பியம் மட்டுமல்லாது சங்ககால இலக்கியங்கள் பலவுமே பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று கூறியிருக்கின்றன. இப்போதும் கூட ஒருவரைப் பார்த்து ஒரு பெண் எப்படிப்பட்டவளாக இருக்கவேண்டுமென்றால், மிகவும் அடக்கமானவளாகவும், ஒருவார்த்தைகூட எதிர்த்துப் பேசாதவளாகவும், சத்தம் போட்டுச் சிரிக்காதவளாகவும், குனிந்ததலை நிமிராதவளாகவும் இருக்க வேண்டும் என்றுதான் கூறுவார். இதை நூலாசிரியர் பாரதியாரின் ஒரு பாடலுடன் இந்த நூலில் விளக்குகின்றார்.

''பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்-புவி
பேணி வளர்த்திடும் ஈசன்.
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.

என்று பாரதியார் மனம் கொதிப்பது நியாயமே. தாய்வழிச் சமுதாயத்தில் தலைமை ஏற்ற பெண்ணினத்தின் ஆற்றலை, அறிவை, வலிமையை சிலர் நிராகரித்தார்கள். அதற்குப் பதிலாக அச்சத்தையும், மடத்தையும், மென்மையையும் அணியச் செய்து வீட்டுக்குள் முடக்கினர் என்று தனது மனக் குமுறல்களைத் தெளிவாக விளக்கியுள்ளார் பிரேமா அருணாசலம்.

அக்காலத்தில் குடும்பம் நடத்துவது மட்டுமே பெண்களுக்குக் கடமையாக இருந்தது. அவர்கள் வேறு எந்தச் சமுதாயப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஏற்கவும் அவர்களுக்கு உரிமையில்லை. போர்க்களங்களில் அமைந்துள்ள படை வீட்டுக்குக் கூட பெண்களை அழைத்துப் போக மாட்டார்கள். அவளுடையபணி கணவரைப் பராமரித்தலும், வீட்டுக்கு வரும் உறவினரை உபசரித்தலும்தான், பிள்ளைகளின் உடலை வளர்ப்பதுதானாம் அவளின் பணி. அறிவை வளர்ப்பது ஆண்களின் பணியாம். இப்படியாகப் பெண் ஒரு குறுகிய வேலிக்குள்ளே அடக்கப்பட்டு வந்தாள். இதை தொல்காப்பியப் பாடல்மூலம் இந்நூல் விளக்குகின்றது.

''முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை''
(தொ. பொ-37)
''எண்ணருங் பாசறைப் பெண்ணோடும்
-புணரார்''
(தொ.பொ-173)
''விருந்துபுறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்''
(தொ.பொ-அ 150)

ஆணுக்குரிய பணிகள் பொருள் தேடல், ஊர் நாடு கடந்து சென்றும் கல்விகற்றல், போர் செய்தல், இவற்றின் மூலம் புகழ் பெறுதல் என்பன. பெண் வீட்டுக்குள்ளேயே முடக்கிப் போடப்பட்டிருந்தாள். இவையெல்லாம் இன்றைய சிந்தனையல்ல. பழமையானவைதான். ஆனாலும் இன்னும் பலசமூகங்களில் பெண்கள் இந்தப் பழமை வாதத்தில் இருந்து விலகமுடியாத நிலையில் தாம் அடைபட்டு, அடக்கப்பட்டு உள்ளனர். இதை உணராத நிலையிலும் பல பெண்கள் உள்ளனர்.

இப்படியெல்லாம் பெண்களை நான்கு சுவர்களுக்குள் முடக்கிய இலக்கியங்கள் ஆண்களை எப்படிக் கூறுகிறது? பெருமையும், அறிவும் ஆணுக்குரிய இலக்கணம். வீரம் அவனது பண்பு. அவனுக்கு கற்பு இலக்கணமே இல்லையாம். அவன் பரத்தையர், காமக் கிழத்தியர் என்று பல பெண்களுடன் தொடர்பு கொள்ளலாம். இது அன்றைய சமூதாயத்தில் ஆண்களுக்கு ஒரு ஒழுக்கமாகக் கருதப்பட்டு வந்தது. அதேநேரம் பெண்களுக்கு சற்பு நெறி மிகக் கடுமையாக நிலைநாட்டப்பட்டு வந்தது.

ஒரு பெண் பருவம் அடையும் முன்னே அவளுக்குத் திருமணம் செய்து விடுவார்கள். ஏனென்றால் அவள் பருவம் அடைந்ததும் வேறு ஆண்மகனை மனதால் கூட நினைக்காது தனது கணவனையே நாடவேண்டும் என்பதற்காக. அப்படி பருவம் அடையும்முன் மகளைத் திருமணம் செய்து கொடுக்காவிட்டால், அப்பெண்ணின் தந்தை நரகத்தில் வேதனைக்கு உள்ளாகுவார் என்று 16ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'சண்டிமங்கலா' எனும் நூல் கூறுகின்றது.

இது எவ்வளவு ஒரு பெரிய கொடுமை. பெண் தனது உணர்வுகளைக்கூட வெளிப்படுத்தமுடியாத ஒரு கட்டாயத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றாள். ஆனால் ஆண்மகனின் பரத்தை ஒழுக்கத்தைச் சமூகம் போற்றுகின்றது. அவன் எப்படிப் போனாலும் பெண்கள் அவனைத் திருப்பிக் கேட்கக் கூடாது என்று வலியுறுத்துகிறது.

இன்னும் பெண்கள் எப்படி எப்படியெல்லாம் அந்தக்காலத்தில் இருந்தார்கள், இருக்கவேண்டும் என்று இலக்கியங்கள் கூறியுள்ளன என்று ஆசிரியர் பல இடங்களில் சுட்டிக்காட்டி உள்ளார். தொழில் காரணமாக கணவன், மனைவியை விட்டுச் சென்றால் மனைவி கூந்தல் சீவி முடிந்து மலர் சூட்டக் கூடாது, கணவன் உண்ட எச்சில் உணவைத்தான் உண்ணவேண்டும், பெண்ணின் இலட்சியம் திருமணம்தான், பெண்களுக்கு ஆண்தான் உயிர், ஆண்மகன் சூரியன், பெண் சூரிய ஒளியைப் பார்த்துத் திரும்பும் நெருஞ்சிமலர் என்றும் இலக்கியங்கள் கூறியதைத் தெளிவாக,

### உலகமங்கை

''வினையே ஆடவர்க்குயிரே வாள்நுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்''
(குறுந்தொகை - 135)

''ஞாயிறு அனையன் தோழி!
நெருஞ்சி அனைய என் பெரும் பணைத்தோளே''
(குறுந்தொகை - 315)

என்ற குறுந்தொகைப் பாடல் மூலம் விளக்கியுள்ளார்.

இப்படியாகப் பெண் எந்தவகைகளில் சிறந்தவளாக இருந்தாலும், அவள் ஆடவனுக்கு கட்டுப்பட்டவள் என்றே இலக்கியங்கள் கூறுகின்றன. இவை முறையா எனக் கேள்விஎழுப்பியுள்ளார் நூலாசிரியர்.

இனி பத்தினித்தெய்வங்களையும் பரத்தையர்களையும் இலக்கியங்கள் எவ்வாறு கூறுகின்றன, நூலாசிரியரின் கருத்துக்கள், கணிப்புக்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

அக்காலத்தில் பெண்கள் பரத்தையர் குலம் என்றும், குலமகள் குலமென்றும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டனர். ஆண்களின் தேவைகளுக்காக பெண்ணினத்தின் ஒரு பகுதியினர் பரத்தையர் என்ற ரீதியில் வஞ்சிக்கப்பட்டு வந்தனர். குலப்பெண்ணானவள் ஒரு கணவனுடனேயே அவனுக்கு அடிபணிந்து வாழ்க்கை நடத்துபவள். இந்தப் பரத்தையர்கள் தாம் எப்படி வஞ்சிக்கப்பட்டுள்ளனர் என்பதை உணராமல் வாழ்க்கை நடத்தி வந்தனர். குலப் பெண்கள் தமது கணவன்மாரைத் தட்டிக் கேட்கத் துணிவில்லாமல் வாழ்ந்து வந்தனர். ஆடவரின் இந்த முறைகேடான வாழ்க்கையால் இரண்டு பகுதிப் பெண்களுமே பாதிக்கப்படுகின்றனர். பரத்தையரோடு குடும்பத்தலைவன் உறவு கொள்ளும்போது குலப்பெண்ணின் வாழ்வு பாதிக்கப்படுகிறது. ஒரு முறையான வாழ்வு இல்லாததால் பரத்தையரின் வாழ்வு பாதிக்கப்படுகின்றது. இவையெல்லாம் எதனால்? ஆடவரின் மித மிஞ்சிய காம உணர்வுக்குத் தீனி போடுவதற்காகவே மிக மோசமான முறையில் இந்தப் பரத்தையொழுக்கம் உருவாக்கப்பட்டது என்று கூறுகிறார் ஆசிரியர்.

இதே நேரம் பத்தினித் தெய்வங்களை எவ்வாறு இலக்கியங்கள் உருவாக்கியது என்பதையும் இவர் இங்கே தெளிவாக விளக்குகிறார்.

புகாரில் வாழும் கண்ணகி, அந்நகரில் வாழும் கோவலனை மணக்கிறாள். கோவலன் கண்ணகியைக் கைவிட்டு, மாதவியை மணக்கின்றான். அவளோடு வாழ்ந்த, பொருள் யாவையும் இழந்து, மீண்டும் கண்ணகியை அடைகின்றான். இருவரும் மதுரைக்கு வருகிறார்கள். கோவலன் மதுரையில் கள்வன் என்று குற்றஞ் சாட்டப்பட்டு கொலை செய்யப்படுகின்றான். கண்ணகி பாண்டியமன்னன் முன் வழக்குரைத்து, மதுரையை எரித்து, பத்தினித் தெய்வமாகிறாள்.

இவ்வாறு கண்ணகியைப் பத்தினித் தெய்வமாகப் படைத்துவிடுகிறது சிலப்பதிகாரம். அவளுக்குக் கோயில் அமைக்கப்பட்டது என்று கூறுகிறது காப்பியம். ஆனால் இது 'அன்றைய சமூகத்தின் கறையாக, பெரும் குறையாக இருந்த பரத்தையொழுக்கத்தால் கண்ணகிக்கு பெரும் அவலம் உண்டானது. எனினும் எவ்வளவு இடர் வந்தாலும் கற்புடையவளாக இருந்து விட்டால் போதும், அவள் பெருமைக்குரியவளாக ஆகிவிடமுடியும்' என்பதையே வலியுறுத்த முனைகிறது.

பெண் தெய்வங்களை வழிபடுதல் என்பது என்றென்றும் தமிழ் சமுதாயத்தில், நம்நாட்டில் கடைப்பிடிக்கப்படும் முறைதான். அதனால் மட்டும் பெண்ணுக்கு ஏற்றம் வந்து விடமுடியுமா? எனவே, கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக ஆக்கிவிட்டதால், பெண்ணின் அவல வாழ்வுக்குத் தீர்வு வந்துவிட்டதாக அர்த்தமாகாது. பெண்ணுக்கு அவள் வாழும் சமுதாயத்தில் அவளும் ஒரு 'மானுடப் பிறவி' என்ற உரிமை கிடைக்கவேண்டும். அதுதான் தேவையானது என்று தனது கருத்துக்களைத் தெளிவாக இந் நூலில் சித்திரிக்கின்றார் நூலாசிரியர்.

இன்றும் கூட எமது மக்களிடையே பெண்ணடிமைத்தனத்தைப் போற்றிப் பாதுகாப்பதற்காக ஆணாதிக்கச் சமுதாயமானது மதம், பண்பாடு, பாரம்பரியம் என்ற கருவிகளைப் பயன்படுத்துகிறது. அதுபோலவே காலந்தோறும் தோன்றி வந்துள்ள இலக்கியங்கள் அவை தோன்றிய காலங்களில் நிலவிய பெண்ணடிமைச் சிந்தனைகளை, படிப்போரின் மனங்களில் ஆழமாகப் பதிய வைக்கும் பணியை நன்றாகவே செய்துள்ளது.

எனவே இன்றும் பெரும்பான்மையினரான பெண்கள் விழிப்படையாது, மூடநம்பிக்கைகளுக்குள்ளே மூழ்கி இருப்பதற்கான பல காரணங்களை இந்த நூலை நாம் முழுமையாகப் படிப்பதன் மூலம் தெரிந்து கொள்ளக்கூடியதாகவும், அறிந்துகொள்கூடியதாகவும் உள்ளது. ஒவ்வொரு பெண்ணும் ஆழமாக ஊன்றிப் படித்து, தெளிய வேண்டிய நூல் இது.

## கனவு சுமந்த கண்கள்

1994-03-08 அன்று நிகழ்ந்த அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடாத்தப்பட்ட இலக்கிய, ஓவியப் போட்டிகளில் மூன்றாவது பரிசைப் பெற்ற கவிதை.

மெல்ல முகிழ்ந்தது ஓர் வைகறைப் பொழுது.
செல்லச் செல்ல புயலாகி தமிழீழத்தில் புதுமை செய்ய
வல்ல இரு கரங்களுடன் மெல்லிழையாள் துயில் எழுந்தாள்.
இல்லா தொன்றில்லை இங்கு அனைத்தும் அவளுக்கடக்கம்.

இரத்தத்துளிகண்டு உடலெல்லாம் பதற நெஞ்சம் நெகிழ்ந்தவள்தான்
அரக்கத்தனத்துக் கெதிராக அடக்குமுறை ஒடிக்க இரத்த ஆறு ஓடச் செய்தாள்.
ஏழைக்கிரங்கி பெரியோர்க்கிரங்கி இருந்தவள்தான்- இன்று
வாழைக்குருத்து வடமுழுக்காய் போகிறதே தமிழீழத்துக்காய்.

நாட்டை மீட்கத் துடிக்கும் இந்தத் தளிர்க்கரங்கள்
வேட்டைக்கு வந்த அந்நியப்படைகளை அதிரவைத்ததுண்டு.
கூட்டுக் குயிலாக கூடு விட்டு வாழாது இங்கு.
நாட்டுக்காக சுதந்திர கீதம் இசைக்கும் குயிலாக வாழுகின்றாள்.

ஈழக்குயிலொன்று இங்கு இடைவிடாது முகாரித்தது.
இன்னிசையாக ஒலிக்கவில்லையே என்று கவலை ஒரு புறம்
ஈழக்குயிலே கலங்காதே! உனக்கு விடிவுண்டு. அதற்கோர் கணமுண்டு.
தாழ வீசும் இளந்தென்றல்போல் நீயும் இளகுவாய்; இனிப்பாய்.

அவள் ஒரு புதுமைப் பெண்! ஓ! பாரதி மறைந்து
அரை நூற்றாண்டு கடந்துவிட்ட காலமிது.
அவளுடனிந்த மண்ணிலிருந்தே வேட்டை நாய்கள்
அவளுக்குத் தாவி முளைத்தன. கடித்துக் குதறின.

பாசறை மீண்டு நேசக்குரல் கொடுத்த வேங்கை அவள்.
வேசமிட்டு எம்மை அழித்த அரக்க இனமழிக்கப் புறப்பட்டாள்.
பாசம் அவள் கண்களை என்றும் மறைத்ததில்லை.
வாசம் வீசும் தமிழீழம் அவள் கண்ணுக்குள் என்றுமுண்டு.

சின்னஞ்சிறு பெண்போல அவள் சிற்றில் விளையாடியதுண்டு.
பெண்மை பெரும் படையைத் தகர்க்கும் அவள் அஞ்சியதில்லை.
பேரணிக்குத் தலைமையேற்றாள். அணிதிரண்டாள்.
வருமெங்கள் தமிழீழத்திலே தடம் பதித்து நடந்து வந்தாள்.

தமிழீழக் கனவைச் சுமப்பதற்கு கண்களிரண்டு அவளுக்குப் போதாது.
தமிழ் ஒன்றே அவள் மூச்சு அவள் சொல் செயல் அத்தனையும்
மாநற் குணமுடையாள் தமிழீழத்தைக் காதல் செய்தாள்.
காதல் மூச்செனினும் அது தமிழீழத்துக்காய் என்றாள்.

நோயுற்ற போதினிலே தாதியாகி நானிலத்தில் வலம் வந்தாள்.
சேயுள்ள அன்னை போலவள் அன்பைச் சொரிந்திடுவாள்.
தாயுள்ளம் கொண்டே அவள் தன் தாய் மீட்க ஓடுகின்றாள்.
தமிழீழம் ஒன்றே அவள் கண்ணுக்குள் மணியாகத் தெரிகிறதே!

- தயாநிதி

## மீண்டு வராத எனக்காகவா?

அம்மா ஏன் அழுகின்றாய்?
மீண்டுவராத எனக்காகவா?
உன்னைத் தழுவிக் கொண்ட
எனது நினைவுகளோடு விசும்புகிறாயே.
காற்றுக்கூட ஒருமுறை
உன்னைக் கண்கொட்டாமல் பார்க்கிறது.
நேற்று உயிர்த்த செடியின் தளிரும்
ஒருமுறை சிலிர்த்து நிற்கிறது.
ஏன் இவைகளையும் கலங்க வைக்கிறாய்?
இரண்டு நாட்களாக மூலையில்
சுருண்டு கிடக்கும் பூனையைப் பார்க்க
இதயம் வலிக்கிறது அம்மா.
நான் கரி பூசிக் கிறுக்கிய
சுவர்மீதே என்னைக் கொழுவியிருக்கிறாய்.
நினைவுகளையும் நிதர்சனத்தையும்
இணைத்துப் பார்ப்பதற்கா?
முள்வேலியைக் கடந்து முன்னேறும்போதும்
உனது முகம் எனது விழித்திரையை
வருடிச் சென்றது.
அப்போதெல்லாம் அழகாக –
அமைதியாகத் தெரிந்தாயே.
அம்மா அழாதே.
உனது உதிரத்திலே உயிர்த்தவளல்லவா நான்.
எனது விழிகள் வலிக்கின்றன.
காலையில் மலர்ந்த பூக்களையும்
உனது கண்ணீர்த்துளிகளையும் – நான்
எதிர்பார்க்கவில்லையே.
இன்னும் மீண்டு வராத எனக்காகவா?
அழாதே அம்மா.
உனது கண்ணீரோடு நான்
கரைந்துபோக விரும்பவில்லை.
பத்துமாதமில்லை எத்தனை நாளானாலும்
என்னை உன்மீது சுமந்துகொள்.
வசந்தத்தை வருத்தாத காற்றோடு
கலந்திருக்கும் என்னை
சுவாசித்துக்கொள்.
அம்மா எழும்பு.
சுருண்டு கிடக்கும் பூனைக்குச் சோறு வை.
உனது கைப்பக்குவத்தில் கனிந்த உணவை
எனது தோழிக்கு ஊட்டு.
இறுதிக்கணத்தை இறுகப்பற்றிக்கொண்டு
என்னைப்போல் வீட்டு
முற்றத்துக்கு முகங்காட்டும்
என்னவரோடு கதைபேசு; களித்திரு.
சுவருக்குள் இருப்பவளல்ல நான்
உன் சுவாசிப்புக்குள்ளே—
அம்மா! போய்ப் படலையைத் திறந்துவிடு.

அணங்கு

## புதுயுகம் படைத்த புதியவளாய்

அவள் முகம் கண்டு
அகமலர்ந்து மடல்செய்து
பதிலை கண்டு,
துள்ளி, குதித்து, ஆடி, பாடி
வளர்ந்தது அன்புடன் வருடமும்.

இருவிடமும் பச்சை காட்ட
பெண் பார்க்கையில்
அம்மா சொன்ன டௌரிக்கு
இவனும் தலையசைத்து
செக்கு மாடுபோல்- அது
இல்லையெனில் இது இல்லையென்று
பேரம் பேசி . . . புதுயுகத்தின்
சராசரிதான் இவனும்.

முகம் நீர் வடித்து, துடைத்து
அவனிடம் நேர் சென்று
புதுயுகத்தின் புது மலராய்
ஏதேதோ பேசி; அதைகேட்டு
தலைகுனிந்து, அவனும் தாயாகிய
பெண்ணும் கூனிக் குறுகி . . .

நெருப்பாகியவளும்
புதுயுகம் படைக்க புதியவளாய் . . .
நாளை நம்பிக்கையாய் மலரும்
விடியலொன்றை அவள் விழிகள் காணும்.
முடிவாய் விதிக்கப்பட்டதல்ல இவை.
அடிவானில் எழும்பும் கதிர்கள் போல
அவளைப்போல் ஆயிரமாய் எழுவர்.
அப்போது தோன்றும் புதியஒளி.

அமுதசாகரன்

## இருளைக் கிழித்தொரு . .

எழுந்து வாரீர் தோழியரே.
எங்கள் விதி எழுத
தடைகள் தாண்டி வாரீர்.
இருளைக் கிழித்தொரு
வரலாறு படைக்க
இரு விழிக்குள்
தீ ஏந்தி எழுவீர்.
பிஞ்சுக் குழந்தையும்
பயங்கர வாதியாய்
பிய்த்தெறியப்படுவதும்,
பதுங்கு குழிக்குள்
பதைத்துத் துடித்து
பெருந் தொகை உயிர்கள்
மாண்டு போவதும்,
எங்கள் தேசத்தின்
அன்றாட சோகங்களாகி விட்ட
இந்த வேளையிலுமா
விழிமூடி மௌனித்திருக்கிறீர்கள்?
வீடுகளிலும் வீதிகளிலும்
தொழில் சாலைகளிலும்
தோட்டங்களிலும்
பாடசாலைகளிலும்
எங்கும் என்றும்
பொம்பரும் ஷெல்லும்
குடிக்கும் உயிர்கள்
உங்கள் உறவுகள்தான்;
இந்த மண்ணின் மகவுகள்தான்.
இந்த நிகழ்வுகளுமா
உங்களை
சிலிர்த்தெழவைக்கவில்லை?
வீட்டுக்குள் நித்தமும்
நித்திரையும் கதையுமாய்
காலம் கழிப்பதும்
புதிய முறைகளில்
சமையல் கலைபயின்று
சான்றிதழ் பெற
உங்களைத்
தயார் படுத்துவதும்
போதும் - இனி
உங்கள் பொறுப்புணர்ந்து
புறப்படுங்கள் தோழியரே.
எல்லை மீறும்
எதிரியை விரட்டி
எங்கள் மண்ணிலே
எங்கள் வாழ்வை உறுதிப்படுத்த
எழுந்து வாரீர் தோழியரே.

-சக்தி

Nallur Branch Library

# தமிழீழச் சட்டங்கள் பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கத் தோள் கொடுக்கின்றன.

எமது நாட்டிலும்சரி, பிற நாடுகளிலும்சரி, பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் நிலவும் ஆழமான புரிந்துணர்வின்மையும், பாலியல் சமத்துவமற்ற நிலையும் பல பூதாகரமான சிக்கல்களை உருவாக்கியுள்ளன; உருவாக்கிக்கொண்டிருக்கின்றன. ஆணாதிக்கப் பிடியிலிருந்து, அரசியல்சமூக ஒடுக்குமுறைகலிருந்து இன்னமும் பெண் விடுபட முடியாமலிருப்பதற்கும் இவை பெருங் காரணிகளாக அமைகின்றன. பெண்ணினத்துக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பின்னடைவு, நாடுகளின் வளர்ச்சி பூரணமடைவதற்கு ஒரு தடையாக இருக்கின்றது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒரு உண்மையாகும்.

இதனால்தான் எமது இயக்கம் தனது முக்கிய கொள்கைகளுள் ஒன்றாகப் பெண் விடுதலையை வரித்துள்ளது. பெண் விடுதலையை வென்றெடுப்பதற்கு பெண்க்கும் ஆணுக்குமிடையிலான ஆழமான புரிந்துணர்வும், பாலியல் சமத்துவமுமே அடிப்படையானவை என்பதில் உறுதியாக நிற்கின்றது.

ஆழமான புரிந்துணர்வுடன் நிகழும் பாலியல் உறவானது, அன்புறவாக, பெண்ணினதும் ஆணினதும் வாழ்நாள் முழுமைக்கும் தொடர்கின்றது. ஆழமான புரிந்துணர்வின்றி, எதிர்ப்பாலரின் சம்மதமின்றி பலவந்தமான முறையில் நிகழ்த்தப்படும் பட்சத்தில் பாலியல் உறவானது பாலியல் வன்உறவாக மாற்றம் பெறுகின்றது. உயிர்களின் தோற்றத்துக்கும் நிறைவான தாம்பத்தியத்துக்கும் அடிப்படையான பாலியல் உறவு. இத்தகைய சந்தர்ப்பத்தில் ஒருவரின், குறிப்பாக பெண்ணின் தனித்துவத்தை (Ego) உடைத்துவிடும் செயலாக அமைந்துவிடுகின்றது. அதைவிட எமது தமிழ்ச் சமூகத்தில் பாலியல் வன்உறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண், ஏதோ தவறான காரியமொன்றைத் தானாக விரும்பிச் செய்தவளைப்போல் நோக்கப்படுவதுதான் வழக்கம். நடந்த வன்உறவுக்கு அப்பெண் ஏதோ ஒரு விதத்தில் தூண்டுகோலாக அமைந்திருந்தாள் என்று பொய்க்குற்றம் சாட்டப்படுவாள். 'ஊசி அனுமதிக்காமல் ஊசியின் காதுக்குள் நூல் நுழையுமா?' என்றெல்லாம் அவளை நோக்கிக் கேள்விகள் எழுப்பப்படும்.

இத்தகைய கேள்விகள் பெண்களை நோக்கி இன்று நேற்றல்ல, புராண காலத்திலிருந்தே கேட்கப்பட்டுவருகின்றன. வசிட்டரின் வாழ்க்கைத் துணைவியான அகலிகையுடன், வசிட்டரின் உருவில் வந்த இந்திரன் உடலுறவு கொண்டான் என்பது புராணக் கதைகளிலே வரும் சம்பவங்களிலே ஒன்று. தன் துணைவனாகவே தோன்றிய இந்திரனை உறவுக்கு அனுமதித்த காரணத்தால் அகலிகை தண்டிக்கப்பட்டாள். இந்திரன் தப்பிவிட்டான்.

'வந்திருப்பது வசிட்டரல்ல. வேறொருவர் என்பது அகலிகைக்குத் தெரிந்தும் உறவு கொண்டாள்' என்பதே அகலிகைமீது புராணங்களால் சாட்டப்பட்ட குற்றம். அப்போது எந்த நீதித்துறையும் பெண்களின் வழக்குகளைப் பரிவுடன் விசாரிப்பதில்லை என்பதால், அவள் கல்லாக மாறும்படி சாபம் இடப்பட்டாள்.

பெண்ணுக்கும் ஆணுக்குமிடையிலான உறவுக்குப் பாலமாக அமைகின்ற பாலியல் உறவானது இவ்வாறு பெண்களை ஒடுக்குவதற்குரிய கருவியாக நீண்டகாலமாகவே பலராலும் பிரயோகிக்கப்பட்டு வருவதையும் நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எல்லா நாடுகளிலுமே பெண்களைப் பாலியல் துன்புறுத்தல்களுக்கு, பாலியல் வன்உறவுக்கான எத்தனிப்புக்கு, பாலியல் வன்உறவுக்கு உட்படுத்துகின்ற ஆண்கள் சட்டத்தின் முன் குற்றவாளிகளாகவே கருதப்படுகின்றனர். தமிழீழத்திலும் சட்டம் இதைத்தான் சொல்கின்றது. எமது இயக்கத்தின் நீதித்துறையால் 1993ம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழீழச் சட்டக்கோவையின் 30-ம்பக்கத்தில்பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

**பாலியல் வன்முறை.**

அ) ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக.

ஆ) அவளுடைய சம்மதத்தைப் பெறாமல்.

இ) அவளைக் கொலை புரிவேன், காயப்படுத்துவேன் என அச்சுறுத்தி, அதனால் அவளது சம்மதத்தைப் பெற்று,

ஈ) தான் அவளுடைய கணவன் அல்லன் என்று தெரிந்திருந்தும் அவளைச் சட்டப்படி மணம் முடித்த கணவன் தானே என்று அவளை நம்ப வைத்து அதன்மூலம் அவளுடைய சம்மதத்தைப் பெற்றும் பெறாமலும்,

உ) பதினான்கு வயது பூர்த்தியடையாத பெண்ணின் சம்மதத்தைப் பெற்றும் பெறாமலும்

ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்வது பாலியல் வன்முறை எனப்படும்.

தமிழீழச் சட்டக்கோவையில் சொல்லப்பட்டிருக்கும் இவ்விடயம்பற்றி சில ஆண்கள் எம்மிடம் பின்வரும் கருத்தைக் கூறினார்கள்.

'பெண்கள் பாலியல் வன்உறவுக்குட்படுத்தப்பட்டால், பாலியல் வன்உறவில் ஈடுபட்ட ஆண் குற்றவாளியாகக் கருதப்படுவார் என்று சட்டம் சொல்லுகின்றது. அப்படியாயின் ஒரு ஆணைப் பெண் பாலியல் வன்உறவுக்குட்படுத்தினால், அந்தப் பெண் குற்றவாளியாகக் கருதப்படமாட்டாரா? ஒரு பெண்ணுக்குச் சட்டம் ஏன் இவ்வளவு இடம் கொடுக்கின்றது?' என்பதே அவர்களின் கேள்வியாகும்.

இவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். ஒரு ஆண், பெண்ணின்மீது பாலியல் வன்உறவைப் பிரயோகிப்பதற்கான சாத்தியம் நூறு வீதமானது. ஆனால் பெண், ஆணின்மீது பாலியல் வன்உறவைப் பிரயோகிப்பதற்கான சாத்தியம் நூற்றுக்குப் பத்து வீதம்மட்டுமே (அதுவும் அந்த ஆண் ஒரு சிறுவனாக இருந்தால் மட்டும்) உண்டு என்று வைத்தியர்கள் கூறுகின்றார்கள். பெரும்பாலும் ஆண்கள்தான் பெண்களைப் பாலியல் வன்உறவுக்குட்படுத்துவது வழக்கம். எனவேதான் இச்சட்டம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

பொதுவாக நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் வெற்றியும் தோல்வியும் சம்பவம் நடந்ததை அவதானித்த சாட்சிகளின் கையில்தான் தங்கியிருக்கின்றது. பெரும்பாலும் பாலியல் வன்உறவுகள் நடைபெற்ற சம்பவங்களுக்குச் சாட்சிகள் கிடைப்பதில்லை. இதனால் பல பெண்கள் தாம் பாலியல் வன்உறவுக்கு உட்படுத்தப்பட்டால், அதை 'எப்படி நிரூபிப்பது? வழக்குத் தாக்கல் செய்த பின்னர் குற்றம் நிரூபிக்கப்படாவிட்டால் தான் அவமானப்பட வேண்டிவருமே' என்ற அச்சத்தில், நீதி மன்றங்களுக்கு வருவதுமில்லை; நீதி கேட்பதுமில்லை.

ஒரு பாலியல் வன்உறவு உண்மையாக நடந்தது என்று நிரூபிக்கப்படுவதற்கு, பாலியல் வன்உறவு நடந்த சில மணி நேரத்துக்குள் பெண்ணை, சம்பவ நேரத்தின்போது பெண்ணால் அணியப்பட்டிருந்த ஆடைகளை மருத்துவச் சோதனைக்கு உட்படுத்திய வைத்தியரின் அறிக்கை ஒன்றே போதும்.

ஆனால் பெரும்பாலும் பாலியல் வன்உறவுக்குட்படுத்தப்பட்ட பெண்கள் தமக்குள் உடைந்துபோய், தமது பெண்மை அழிந்துவிட்டதாக தவறாக எண்ணி அதிர்ந்துபோய் நிற்பதால், மருத்துவப் பரிசோதனை பற்றியோ, குற்றவாளியைத் தண்டிக்க வேண்டும் என்பதுபற்றியோ சிந்திக்கமுடியாத நிலையில் நிற்பார்கள். பாலியல் வன்உறவு நடந்ததால் தமது ஆளுமை, தனித்துவம் அழிந்துவிடுவதாகப் பல பெண்கள் எண்ணுவது பெரும் தவறு எதையும் எதிர்கொள்ளும் துணிவு இருக்கும் வரையில் ஆளுமையும், தனித்துவமும் அவளுடனேயே இருக்கும்.

பாலியல் வன்உறவுச் சம்பவங்கள் பெரும்பாலும் நீதிமன்றம்வரையில் வருவது இல்லை என்பது உண்மையே. ஆனாலும் அண்மையில் கிளிநொச்சியில் ஒரு வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது. ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுமியின் மீது பாலியல் வன் உறவைப் பிரயோகித்த மணமான வாலிபர் ஒருவர் நீதிவிசாரணையின் போது குற்றவாளியாக இனங்காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். அவர்மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுவதற்கு மருத்துவரின் அறிக்கைகள்தான் பேருதவி புரிந்தன. இங்கே குற்றவாளி தண்டிக்கப்படுவதற்கு குறிப்பிடப்பட்ட பெண்ணின் துணிவும், பெண்ணின் பெற்றோரினது அக்கறையுமே மூலகாரணமாக அமைந்தன. இந்த வழக்கின் வெற்றி பலருக்கு ஒரு எச்சரிக்கையாக அமையும்.

மேலும் இரு பாலியல் வன்உறவுக்கான எத்தனிப்புக் குற்றங்கள் பற்றிய வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது, தமிழீழச் சட்டக்கோவையிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதித்துறையிலும் மக்கள் கொண்டுள்ள அபாரமான நம்பிக்கையைக் காட்டுகின்றது. எமது இயக்கத்தின் நீதித்துறை, மக்களிடம் குறிப்பாகப் பெண்களிடம் மிகவும் நியாயமாகவே நடந்துகொள்ளும். எமது இயக்கத்தின் முக்கிய கொள்கைகளுள் ஒன்றான பெண் விடுதலையை வென்றெடுப்பதற்கு தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்ளும்.

எனவே தமிழீழப் பெண்கள் தம்மீது மேற்கொள்ளப்படும் (பாலியல் ரீதியான அடக்கு முறை உட்பட) எந்தக் குற்றங்களுக்கு எதிராகவும் குரல் கொடுக்கலாம்; நீதி கேட்டு, குற்றவாளிகளைத் தண்டிக்கலாம். பெண்கள் தன்னம்பிக்கையுடன் நிமிர்ந்து நின்றால்மட்டுமே வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட முடியும். எப்போதும் நியாயத்தின் பக்கமே நிற்கும் எமது இயக்கம், நிமிர்ந்து நிற்க விரும்பும் பெண்களுக்குத் தோள் கொடுக்கத் தயாராக இருக்கின்றது.

மலைமகள்

## எம் தேச நிகழ்வு

கனத்த கரத்துடன்
கண்கள் சிவக்க
கழிந்து போயிற்று
களத்து இரவு.
கயவர் பாசறை
எரிந்து நிமிர்ந்து
எழுந்து நிற்கையில்
கண்கள் நனைந்து
இதயம் நொந்தது
நேற்று வரைக்கும்
அருகிருந்தவள்,
உண(ர்)வு பகிர்ந்த
ஆருயிர்த் தோழி
இரத்தப் படுக்கை
விரித்துக் கிடந்தாள்
நீண்ட துயிலில்
ஆழ்ந்து விறைத்தாள்.
இது எம் தேசத்தின்
இன்றைய நிகழ்வு.
இதுவே நாளை எம்
தேசத்தின் விடிவு

வேள்நிலா

(சிறுகதை)

# மனித இயந்திரம்

தேவகி

அலாரம் அடித்தது. நேரம் 3 மனி 30 நிமிடம். இன்னும் அரைமணித் தியாலம் படுக்கலாமே என உடல் கெஞ்சியது. ஐயய்யோ அப்படி படுத்தால் 7.00 மணிக்கிடையில காலைச் சாப்பாடும் மத்தியானச் சாப்பாடும் செய்து முடிக்க முடியாது என மனம் பதறியது. மளமளவென்று எழுந்து கணவனதும் பிள்ளைகளதும் நித்திரையைக் குழப்பிவிடாமல் மெல்ல நடந்து படுக்கை அறையை விட்டு வெளியே வந்தேன். காலையில் சத்தம் கேட்டு அவர் எழும்பி ஏசக்கூடாது என்ற பயத்தில் இரவே சமையலறையில் எடுத்து வைத்த பாத்திரங்களை எடுத்துக்கொண்டு நேரே கிணற்றடிக்குப் போனேன் பாத்திரங்களைக் கழுவி முடித்து விழுத்தி சத்தம் வைக்காமல் கவனமாக சமையலறைக்குள் வைத்துவிட்டு அடுப்புமூட்டி உலையை வைத்துவிட்டு அரிசியைக் கிளைந்து அதற்குள் போட்டு விட்டு மளமள வென்று மரக்கறியை வெட்டத் தொடங்கினேன். எல்லாவற்றையும் வெட்டி கழுவி வைத்துவிட்டு மெது மெதுவாக தேங்காயைத் துருவினேன். விரைவாகத் துருவினால் சத்தம் கேட்டு அவர் எழுந்து எரிந்து விழுவார் என்ற பயத்தில்தான் அப்படி மெதுவாகத் துருவுவேன்.

இவைமட்டுமல்ல கமலா என்ற இயந்திரத்தின் வேலை தினமும் இப்பபடியே தொடரும்.

காலைச் சாப்பாடும் மதியசாப்பாடும் செய்து முடிக்கவும் அவரும் பிள்ளைகளும் எழும்பவும் சரியாக இருக்கும். பல் துலக்கி முகம் கழுவிவிட்டு பிள்ளைகள் நேரே சமையலறைக்கு தேநீர் குடிக்க வருவார்கள். அவர்களுக்கு கொடுத்துவிட்டு அவருக்கு கொண்டு போய்க் கொடுப்பேன். அலுவலாக இருந்து பிள்ளைகளிடம் கொடுத்துவிட்டால்''என்ன கொம்மா செய்யுறா? புருஷன்காரனுக்கு ஒரு தேத்தண்ணியைக் கூட அவவாலை நேரை கொண்டு வந்து தரேலாமல் இருக்காமோ''என்று சினந்து விழுவார் என்ற பயத்திலதான் என்ன வேலை இருந்தாலும் நானே தேநீரைக் கொண்டு போய்க் கொடுப்பேன். அவர் தேநீர் குடித்து பேப்பர் வாசிப்பதற்கிடையில் பல்துலக்குதல், குளித்தல் உட்பட அன்றாட கடமைகளைச் செய்து முடித்து விடுவேன். எனது வேலைகள் முடிய பிள்ளைகளும் தமது வேலைகளை முடித்து விடுவார்கள். நாங்கள் மூவரும் குளித்து உடைமாற்றி பாடசாலைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் போதே அவர் தனது வேலைகளை முடித்துவிட்டு சாப்பாட்டு மேசைக்கு வந்து விடுவார். சேலை உடுத்ததும் உடுக்காததுமாய் மளமளவென்று சமையலறைக்குள் சென்று காலைச்சாப்பாட்டை எடுத்துவந்து அவருக்கும் பிள்ளைகளுக்கும் பரிமாறுவேன். அவர்கள் சாப்பிட்டு முடிந்தபின் அவசர அவசரமாய் இரண்டுவாய் அள்ளிப்போட்டுவிட்டு எனது காலைச்சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு பாத்திரங்களை எடுத்து உள்ளே வைத்து சமையலறையைப் பூட்டிக்கொண்டு சேலை உடுக்கும் வேலையை அவசர அவசரமாக முடிப்பேன். சிறிது தாமதமானாலும் என்ன நான் விட்டிட்டு போகட்டோ? இல்லையெண்டால் கெதியே வாறியோ'' என்று சினந்துகொண்டு நிற்பார் அவர். ஒரு மாதிரியாக எல்லாவேலைகளையும் முடித்துக்கொண்டு நாங்கள் புறப்படுவோம். அவர் தனது சைக்கிளில் என்னை ஏற்றிச் செல்வார். மகள் தனது சைக்கிளில் தம்பியை ஏற்றிச் செல்வாள்.

ஒரே பாடசாலையில்தான் அவரும் நானும் படிப்பிக்கிறோம். பிள்ளைகளும் அங்குதான் படிக்கிறார்கள். பாடசாலை முடிய எல்லோரும் ஒன்றாகவே வீடு திரும்புவோம். பாடசாலையைத் திறக்கும்போதே ''பசி வயிற்றைப் பிடுங்குது கெதியாய் போய்ச் சாப்பாட்டை எடுத்துவை'' என்பார். வீட்டுக்குள் நுழைந்ததும் கையில் கொண்டு வரும் பொருட்களை அப்படியே வைத்துவிட்டுநேரே சமையலறைக்குப்போய் சாப்பாட்டை எடுத்துமேசையில் வைப்பேன். அதற்கிடையில் அவர் பாடசாலை உடுப்பை மாற்றி சாறத்துடன் வந்துவிடுவார். அவர் முகம் கை கால் கழுவி வரும்போது அவருக்கும் பிள்ளைகளுக்கும் தட்டுக்களில் சாப்பாடு போட்டு விடுவேன். ஒரு நாள் கூட உனக்கும் பசிக்கும் தானே எங்களோடையே இருந்து சாப்பிடன் என்று அன்பாகக் கேட்டிருக்கமாட்டார். ஒரு நாள் எனது மகள் '' அம்மா நீங்களும் எங்களோடை இருந்து சாப்பிடுங்கோவன்' என்று கேட்டபோது அவளையும் ஒரு கணம் முறைத்துப் பார்த்துவிட்டு என்னையும் எரிப்பது போல பார்த்து விட்டு ''சாப்பிடேக்குள்ளே என்ன கதை? சத்தம் போடமால் சாப்பிட்டு விட்டு எழும்ப வேண்டியதுதானே'' என்று அவள் மேல் சினந்து விழுந்தார். அதன் பிறகு அவள் ஒரு போதுமே அப்படிக்கேட்டதில்லை. அவர்கள் சாப்பிட்டு முடிந்தவுடன் எல்லாவற்றையும் எடுத்து சமையலறைக்குள் வைத்துவிட்டு எனது அறைக்கு வந்து உடை மாற்றிய பின்தான் நான் சாப்பிடுவேன். நான் சாப்பிட்டு விட்டு வெளியே வரும்போது அவர் நித்திரையாகி விடுவார். பிள்ளைகள் ரியூசனுக்கு புறப்பட்டு விடுவார்கள். காலையில் போட்டது போட்டபடி இருக்கின்ற பாத்திரங்களையும் ஏனையவற்றையும் கழுவி முடிக்க மூன்று மணி ஆகிவிடும். ரியூஷனுக்காக பிள்ளைகள் வந்து விடுவார்கள். அவர்களுக்கு படிப்பித்து முடியவும் அவர் நித்திரையால் எழும்பவும் நேரம் சரியாக இருக்கும் மாலைத்தேநீர் தயாரித்து அவருக்கு கொடுத்து விட்டு நானும் குடித்து விட்டு இரவுச் சாப்பாடு தயாரிக்கும் வேலையைத் தொடங்கிவிடுவேன். அவர் தேநீரைக் குடித்துவிட்டு சைக்கிள் எடுத்துக் கொண்டு புறப்பட்டால் இரவு 7.00 மணிக்கு திரும்புவார். எங்கு போகின்றீகள் என்று அவரை நான் கேட்பதில்லை அவரும் சொல்வதில்லை. ஒரு நாள் இப்படித்தான் கேட்டு அவரிடம் நல்ல ஏச்சு வாங்கினேன். அதற்குப் பிறகு நான் கேட்பதில்லை. வம்பளக்கத்தான் போகின்றார் என்பதை நாளாவட்டத்தில் நான் அறிந்து கொண்டேன். 7.00 மணிக்கு வீடுதிரும்பும் அவர் அங்கு கதைத்தவற்றில சிலவற்றை எனக்குச் சொல்வார். முன் விறாந்தையிலிருந்து கதை சொல்வதற்காக கூப்பிடுவார். கையிலை வேலை இருக்கின்றது எனச் சொல்ல முடியாது. அதனால் அடிக்கடி வெளியில் வருவதும் சமையலறைக்குள் போவதுமாக இரவுச் சாப்பாடு தயாரித்து விடுவேன்.

இரவு 8.00 மணிக்கு எல்லோரும் சாப்பாட்டு மேசைக்கு வந்து விடுவார்கள். சாப்பாட்டு முடிந்தது சிறிது நேரத்தால் பிள்ளைகள் படுக்கப்போய் விடுவார்கள். பாட சாலை வேலைகளை அவர் செய்வார். நானும் சமையலறை வேலை முடிந்து வர 9.30 மணி ஆகிவிடும். அதன் பின்னர்தான் எனது பாட—சாலை வேலைகளைச் செய்வேன். படுப்பதற்கு சில வேளைகளில் இரவு 11.00 மணிக்கும் கூடிவிடும்.

இதுதான் எனது அன்றாட ஒழுங்கு முறையான வேலைகள். இவற்றிலிருந்து சிறிது கூட என்னால் அசைந்து கொடுக்க முடியாது.

வம்பு பேசுகின்ற நேரத்தில் பிள்ளைகளுக்கு ரியூசன் சொல்லிக் கொடுத்தால் சிறிது பணமாவது கிடைக்கும் என்று நேரே சொன்னால் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியும். முன்பு ஒரு நாள் ''நீங்களும் ரியூஷன் குடுத்தால் குடும்பச் செலவைச் சமாளிக்கலாம்'' என்று நான் சொன்னபோது ''என்னை என்ன மாடு எண்டு நினைச்சிட்டியோ? மனிசன்படிப்பிச்சுக் களைச்சு கொஞ்ச நேரம் ஆறுதலாய் இருப்பம் எண்டு நினைச்சால் இப்படி ஒரு தொணதொணப்பு'' என்று சீறிப்பாய்ந்ததோடு இப்படிக் கேட்பதையே நிறுத்தி விட்டேன். அந்தநேரம் 'என்னை மாடென்று நினைச்சிட்டீங்களா' என்று திருப்பிக் கேட்க என்னால் முடியவில்லை. இப்படி எத்தனையோ கேள்விகள் எனக்குள் எழுந்து எனக்குள்ளேயே மடிந்து விடும்,

ஒரு கணப்பொழுதும் ஓய்வில்லாமல் உழைக்கும் எனக்கு இவற்றிலிருந்து விடுதலை கிடைக்குமா? இதிலிருந்து விடுபட என்ன செய்யலாம்? இந்தக் கேள்விகளுக்கு விடை காண்பதற்கு சிறிது நேரமாவது யோசிக்கவேண்டும். அதற்கு எனக்கு எங்கே நேரம் கிடைக்கிறது?

அன்பு, காதல், பாசம் என்ற எந்த உணர்வுமே அவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. என்னை ஒரு மனிதப் பிறவியாக நினைத்திருந்தாலல்லவா இந்த உணர்வுகள் அவருக்கு இருக்கும். தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கட்டி வைக்கப்பட்ட ஒரு சடப்பொருளாக என்னை நினைப்பதால் தானே ஒரு இயந்திரமாக நான் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

வீட்டு வேலைகள், பாடசாலை வேலைகளுடன் என் வாழ்நாள் நகர்ந்தது. இதற்கு அப்பால் எனக்கு எதுவுமே தெரியாது. ஒரு நாள்கூட பத்திரிகை படிக்க எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததில்லை. நாட்டில் நடக்கும் விடயங்களைப் பற்றி என்னைக் கேட்டால் எனக்குப் பதில்சொல்லத் தெரியாது. ஒன்றே ஒன்றுமட்டும் எனக்குத் தெரியும். தங்களுக்காக வாழ நினைக்காமல் எம் மக்களின் விடிவுக்காக தம் உயிரைக் கொடுத்து எமது பிள்ளைகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் அது. இளம் வயதில் எவ்வளவு கனவுகள், ஆசைகள் அந்தப் பிள்ளைகளுக்கு இருக்கும். அவற்றையெல்லாம் துறந்து நாட்டுக்காக போராடும் அந்தப் பிள்ளைகளை எண்ணும்போது என் உடலும் உள்ளமும் சிலிர்த்துக் கொள்ளும். ஆனால் எந்த ஒரு போராளியுடனும் கதைக்க எனக்கு அனுமதியில்லை. அப்படி அதனையும் மீறி நான் யாருடனும் கதைத்தால் அன்று வீடு இரண்டாகும். அவரின் வசைச் சொற்களால் என் மனம் நார் நாராகக் கிழிக்கப்படும். எனக்கு மனம் என்று ஒன்று இருப்பது அவருக்குத் தெரியாதுதானே. அதனால் தனது வாய்க்குள் வரும் அத்தனை கொடிய வார்த்தை நெருப்புத் துண்டங்களையும் என்னைநோக்கி வீசுவார். இந்தப் பயத்தில் நான் போராளிகள் எவருடனும் கதைப்பதில்லை.

ஒரு நாள் எனது மகள் என்னிடம் வந்து ''அம்மா, சண்டையிலை காயப்பட்ட எங்கடை அக்காமாரைப் பராமரிக்க ஆட்கள் வேணுமாம் நான் போகட்டோ'' என்று கேட்டாள். ''எங்கை பிள்ளை போகவேணும்'' என்று நான் கேட்டபோது ''இரவிலை ஆஸ்பத்திரியிலை நிக்கவேணும்'' என்றாள்

''அப்பாவிட்டை கேட்டு ஓமெண்டு சொன்னால் போகலாம் தானே'' என்று சொல்லும் போது ''நானும் கேட்டு போனால் என்ன'' என்று என் மனம் தவித்தது எதற்கும் அவள் கேட்பதற்கு அவர் என்ன பதில் சொல்கிறார் எனப் பார்ப்போம் என நினைத்தேன்.

என்னைப் போல பயந்தவளல்ல என் மகள். எதற்குமே பயப்படாதவளாக அவள் மாறி வருகின்றாள். எதனையுமே யாரென்றும் பார்க்காமல் நேரேயே கேட்டு விடுவாள். அவளின் மாற்றத்திற்கான காரணத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. பெண் போராளிகளின் முகாம்களுக்கு செல்வதும், ரியூஷன் நேரங்களில் அதனை விட்டுவிட்டு கருத்தரங்குகளுக்கு போவதும் அவள் சொல்லாமலே நான் அறிந்து கொண்ட விடயங்கள் என்னால்தான் போராட்டத்தில் பங்களிக்க முடியவில்லை. அவளாவது பங்கு பற்றட்டுமே என்ற எண்ணத்தில் அங்கு போவது பற்றி நான் எதுவுமே கேட்பதில்லை ஆனால் அவள் என்னிடம் இதனைப் பற்றி எதுவுமே சொல்லாதது என மனதுக்கு மிகவும் வேதனையைத் தந்தது. என் மகளும் என் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லையே என்ற நினைப்பு என்னை மிகவும் பாதித்தது.

அவள் தந்தையிடம் போய் ''அப்பா காயப்பட்ட அக்காமாரைப் பராமரிக்கிறதுக்காக இரவிலை ஆஸ்பத்திரியிலை நிக்கப்போறன்'' என்றாள் ''என்ன? வீட்டுக்குள்ளை அடக்க ஒடுக்கமாய் இருக்கத் தெரியாமல் வெளிக்கிட்டு வந்து காயப்பட்டதுகளைப் பராமரிக்கப் போகப்போறியோ? என்ன துணிவிருந்தால் என்னட்டை வந்து இந்தக் கேள்வியைக்கேட்பாய். எல்லாம் கொம்மாவின்ரை வளர்ப்புத்தான். அங்கைபோறன் இஞ்சைபோறன் எண்ட கதையெல்லாம் வேண்டாம் பேசாமல் உன்னை படிப்பைக்கவனி''என்று அவர் பாய்ந்து விழுந்த போது அவள் திருப்பிப் பதில் சொல்வாள் என்று காதைத்தீட்டிக் கொண்டு நின்றேன்'' நாட்டிலை என்ன நடக்கிறது எண்டு தெரியாமல் இப்படிக் கீழ்த்தரமாய்க் கதைக்கிற உங்களைப் போன்ற ஆட்களை வலுக்கட்டாயமாகக் கூட்டிக் கொண்டுபோய் எல்லையிலை காவல் நிக்கிற எங்கட பிள்ளையளுக்கு கிட்ட நிப்பாட்ட வேணும். அப்பத்தான் உங்களுக்கு நாட்டு நிலைமை தெரியும்' என்று எனக்கே கத்த வேணும் போல் இருந்தது அப்படி இருக்கும்போது எனது மகள் சும்மா இருப்பாளா என்று தான் நினைத்தேன். ஆனால் அவள் திருப்பி எதுவுமே கதைக்க வில்லை மெளனமாக வந்து புத்தகத்தை எடுத்து படித்துக் கொண்டிருந்தாள் அவளில் எனக்கு கோபம் கோபமாக வந்தது ஆனால் அவளிடம் நேரே ஒன்றும் சொல்லவில்லை 'ஏன் அவள் திருப்பிக் கதைக்கவில்லை? என்ற கேள்வி என் மனதை அரித்துக்கொண்டே இருந்தது. ஆனால் அந்தக் கேள்விக்கு பதில் மறுநாளே கிடைத்துவிட்டது.

ரியூஷனுக்கு போனமகள் இரவு 7.00 மணியாகியும் திரும்பி வராததால் என்னையும் கூட்டிக் கொண்டு ஒவ்வொரு போராளிகளின் முகாமாக அவர் அலைந்தார். இறுதியில் அவள் இயக்கத்தில் இணைந்துவிட்டாள் என்பதும், எம்மைப் பார்க்க அவள் விரும்பவில்லை என்பதும் தெரிய வீடு திரும்பினோம் அவருக்கு சரியான விளக்கத்தைச் செயல் மூலம்காட்டிச் சென்ற என் மகளை நினைக்கும் போது எனக்குப் பெருமையாக இருந்தது.

ஆம் புதிய சமுதாயம் உருவாகிறது. காலங்காலமாக மனரீதியாக அமுக்கப்பட்டு அழுவதைக் கூட அடக்கியே அழப்பழக்கப்படுத்திக் கொண்ட பெண்ணினத்துக்கு விடுதலை கிடைக்கின்ற காலம் உருவாகிக் கொண்டு வருகிறது. புதிய கருத்துக்களுடன் புறப்பட்டு செயலாற்றும் இளைய சமுதாயத்துடன் எம்மைப் போன்றவர்களும் இணைந்து போராடப் புறப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை எண்ணுபோதும் என் மனம் ஆறுதலடைய தொடங்கியது. இனி நானும் சரியென்று பட்டதை நேரே சொல்லத்தான் போகிறேன். எத்தனை நாளைக்கு இவரால் ஏச முடியும்? அடிக்க முடியும்?

 Nallur Branch Library 

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

## பெண் கல்வியும் . . .

யமாற்றங்களையும் ஏற்படுத்திவிடமுடியாது. ஆயினும் மாற்றத்தைத் தூரிதப்படுத்தும் அல்லது தடைப்படுத்தும் வகையில் கல்வி தொழிற்படமுடியும். பெண்கள் பிறரில் தங்கியுள்ள வீட்டுப்பெண்கள் என்ற நிலையும், அவர்கள் இரண்டாம் நிலை வருமானம் ஈட்டுவோர் என்றநிலையும் பாட ஏற்பாட்டு அம்சங்கள், பாடத்தெரிவுகள், தொழில் ஊக்குவிப்புக்கள், பயிற்சித்திட்டங்களின் பாடப்பொருள்கள் என்பவற்றில் முக்கியதாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே பெண் சல்வியைப் பொறுத்தவரை பெண்ணின் ஆளுமைகளை வெளிப்படுத்தும்முகமாக அவளது முகாமைத்துவப் பண்புகளை விருத்தி செய்யும் நோக்கமாக அமையப்பெறவேண்டும். ஒரு பெண்ணினுடைய திறமைகள் சிதறடிக்கப்படாமல் நெறிப்படுத்தப்படுமேயானால் அவளது ஆற்றல்கள் பரிணமிக்கும்.

கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்களின் விளைவாக எழுத்தறிவிலும் கல்வித்தகுதிகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள், எந்தளவுக்கு பெண்களின் வாழ்க்கையிலும் அவர்களின் தனிப்பட்ட விருத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதைக் கருத்திற்கொள்ளவேண்டும். கல்வித்தகுதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்காரணமாக பெண்களின் திருமண வயது இருபத்து நான்காக உயர்ந்தது. கல்வியும் வேலைவாய்ப்புக்களும் குடும்பத்தின் பருமனையும் குறைத்துவிட, இளம் பிள்ளைகளின் போசாக்கு நிலைமை, சுகாதார வசதிகளைப் பயன்படுத்தல் என்பவற்றைத் தாயின் கல்விநிலையே தீர்மானிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே எந்த ஒருநாட்டினதும் முன்னேற்றத்துக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் பெண்களின் சல்விப் பாரம்பரியம் முக்கிய அளவுகோலாக அமைகிறது.

ஒரு குடும்பத்தின் அறிவு விருத்திக்கு, அதனூடாக சமுதாயத்தின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்குபவை பெண்களின் கல்வியறிவு வளர்ச்சியேயாகும். இன்றைய நவீன வரலாற்றை மேலோட்டமாகப் பார்க்கையில், பெண் கல்வியின் முன்னேற்றம் வியக்கத்தக்களவில் அமைந்துவிட்டது என்று கூறினாலும் கூட, மூன்றாம் உலகநாடுகளில் பெண்களின் கல்வித்தரம் பெருமளவு முன்னேற வேண்டியதொன்றாகவே இருந்துவருகிறது.

எமது தமிழீழத்தைப் பொறுத்தவரை பின்தங்கிய கிராமப்புறங்களில் எழுதப் படிக்க வாசிக்கத் தெரியாதோரின் எண்ணிக்கை அதிகம். அதுவும் பெண்களின் தொகையே ஆண்களைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. தங்கள் கையெழுத்துக்களைக் கூட வைக்கமுடியாதளவுக்கு, அடிப்படைக்கல்வியறிவு முற்றுப்பெறாத நிலையிலுள்ள பெண்களின் நிலை வேதனைக்குரியது. பாடசாலைகளுக்குச் சென்று கற்பதற்குப் பதிலாக தங்கள் வாழ்க்கையை நடாத்தத் தேவையான பணிகளை ஆற்றவேண்டுமென அநேகமான பெண்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். பாடசாலைக்குச் செல்லும் வயதை அடையும் முன்னரே வீட்டு வேலைகளைச் செய்ய ஒரு சிறுமி ஆரம்பித்துவிடுவாள்.

குழந்தையின் ஆரோக்கியம், குழந்தையை வளர்த்தெடுத்தல் மற்றும் திட்டமிட்ட முறையில் குடும்பத்தை அமைத்துக்கொள்ளல் போன்ற விடயங்கள் சம்பந்தமாகத் தாய்மார் நடந்து கொள்ளும் முறையைப் பெண்களின் கல்வியறிவு விருத்தியே ஏற்படுத்தும்.

ஒரு சமுதாயத்திலுள்ள தனிமனிதன் தன் ஆற்றலை வெளிக்கொணரவும், தனது தேவையை பூர்த்திசெய்யவும் பொருளாதார மேம்பாடு அடையவும் தன்னைத்தான் வளப்படுத்திக்கொள்ளவும் முற்போக்கான வாழ்க்கைக் கல்வி வகைசெய்கிறது.

எனவே எதுவித கட்டாயங்களும் இன்றி தன் சுயவிருப்பப்படி தனக்குப்பொருத்தமானதாகவும் தனக்கு ஏற்றதுமான கல்விப்பிரிவையோ தேர்ச்சியையோ ஒரு பெண் தன் சுய விருப்புக்களைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை அமைக்கப்படவேண்டும்.

எமது தேசிய விடுதலைக்காக நாம் போராடிக் கொண்டிருக்கும் காலம் இது. எமது போராட்டப் பாதையில் பெண்ணின் வளர்ச்சி அளப்பரியது. இந்நிலையில், கல்வி, தொழில், பொருளாதார நிலைகளில் பாகுபாடுகளை ஒழித்து, பெண்ணானவள் சமுதாயத்தின் மிகமுக்கிய அங்கம் என்பதை மதித்து, முன்னேற்றகரமான சமுதாயத்தை வளர்க்கப் பாடுபடுவோம்.



எமது சுதந்திர இயக்கத்தின் ஆரம்பகாலம் தொட்டே பெண் விடுதலையை ஒரு பிரதான இலட்சியமாக நாம் வரித்துக்கொண்டோம். பெண்கள் விழிப்புற்று, எழுச்சிகொண்டு தமது சொந்த விடுதலைக்காகவும் தேசத்தின் விடுதலைக்காகவும் போராட முன்வரும்போதுதான் அந்தப் போராட்டம் ஒரு தேசியப் போராட்டமாக முழு வடிவத்தைப் பெறும் என்ற உண்மையை நாம் அன்று தொட்டே உணர்ந்திருந்தோம்.

**தலைவர்**
**திரு வே. பிரபாகரன்**

## வீர தீர விளை . . .

இந்த விளையாட்டில் ஈடுபட விருப்பமா என்று கேட்டார்கள். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த நாம் உடனேயே சம்மதித்துவிட்டோம்.

வீட்டில் எமக்கு எதிர்ப்புக் கிளம்பியது. பெற்றோரை ஒருவாறு சமாளித்து, பயிற்சிகளுக்குப் போய்வந்தோம். நாம் நினைத்ததைச் செய்துகாட்டினோம். ஆனாலும் எமக்கு ஏதாவது உடற்பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ என்ற பெற்றோர்களின் அச்சம் சிறிதும் குறையவில்லை.

நாம் தொடர்ந்தும் பயிற்சிகளுக்குப் போய்வருகின்றோம். தொடர்ந்தும் இவ்விளையாட்டில் ஈடுபடத் தயாராகஇருக்கின்றோம்.''

என்றார்கள் உற்சாகமாக.

இந்த வீராங்கனைகளின் ஆசிரியரும் தமிழீழத்தின் முதலாவது 'சான்டோ'வுமான துரைரட்ணம் அவர்களும் இவர்களின் கருத்தைத்தான் வலியுறுத்தினார்.

''ஆண்களால்மட்டுமே முடியும் என்று கருதப்பட்ட வீர தீர விளையாட்டுக்களையெல்லாம் பெண்களால் செய்யமுடியும் என்று காட்டவேண்டும். பெண்களால் முடியாதது எதுவுமில்லை என்பதை எல்லோரும் நம்பும்படி செய்யவேண்டும்.

இந்தப் பெண்கள் இருவரும் செய்தது மிகப் பெரிய சாதனை. வீர தீர விளையாட்டுக்களில் தமிழீழத்தின் முதலாவது வீராங்கனைகள் இவர்கள், இந்த உண்மையை ஏற்றுக்கொள்வது பலருக்குக் கடினமாகத்தான் இருக்கும். ஆனால் ஆரம்பத்தில் ஆயுதப் போரில் ஈடுபட்ட பெண் போராளிகளை ஏற்றுக் கொள்ளாத மக்கள், இப்போது அவர்களை இயல்பாக ஏற்றுக்கொள்ளவில்லையா? அதுபோல, ஒரு கட்டத்தில் இந்த வீராங்கனைகளும் இவர்களுக்குப் பின்னால் வரப்போகும் வீராங்கனைகளும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.''

என்றார்.

எமது சமூகம் பெண்கள்மீது போட்டுள்ள இறுக்கமான தடைகளை அறுத்து, வீர விளையாட்டில் சாதனை புரிந்த மாலாவையும் யமுனாவையும் பாராட்டி, மிகுந்த நம்பிக்கையுடன் அவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களின் சாதனைக்குப் பக்கபலமாக நின்ற 'சான்டோ' துரைரட்ணம் அவர்களுக்கும் 'சான்டோ' செல்வராஜா அவர்களுக்கும் நன்றி கூறி, அவர்களிடமிருந்து விடைபெற்றோம்.

## சுதந்திரத்தைத் தேடி...

உடைக்கோணும்'' என்று கூறியதும், தாமதியாது தனது குழுவுடன் சென்று மதிலை உடைதுவிட்டுத் திரும்பினாள்.

எந்தக் கணத்திலும் எந்தக் களத்திலும் போராளிகளின் வாழ்க்கை முடியலாம். இது அவர்களுக்குத் தெரியும். உஷாவும் இதைத் தெரிந்து வைத்திருந்தாள்.

''நான் செத்தால் என்ர ஜீ. திறீயை வாசுகிக்குத்தான் குடுக்கோணும்'' என்று அடிக்கடி கூறுவாள்.

தனது தோழிகளையும், சக போராளிகளையும் சீண்டுவது இவளுக்குப் பிடித்தமான ஒன்று. எந்தளவுக்குச் சீண்டுவாளோ அத்தளவுக்கு அவர்கள்மீது பற்றையும் வைத்திருந்தாள்.

இப்படி இருக்கும்போதுதான் உஷா கொக்காவில் இராணுவத்தளத்தைத் தாக்குவதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டாள். இவளது குழு, உதவிக் குழுவாக இரண்டாவதாக அனுப்பப்பட இருந்தது. ஆனால் தனது குழுதான் முதலில் போகவேண்டுமென அடம்பிடித்தாள்.

கொக்காவில் இராணுவத் தளம்மீதான தாக்குதல் 1990 - 07. 10 அன்று இரவு 11 00 மணிக்கு ஆரம்பமாகியது.

இரவின் அமைதியைக் குலைக்கும் வகையில் வெடி ஓசைகள் கேட்கத்தொடங்கின. பகல் போலப் பிரகாசித்த நிலவொளியில், இடத்துக்கும், களத்துக்கும் ஏற்ப நிலையெடுத்துப் புலிகள் போரிட்டனர். அவர்களின் துப்பாக்கிகள் நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்தன.

திடீரென எதிரியால் ஏவப்பட்ட சன்னம் ஒன்று பாய்ந்தது பின்னே திரும்பிச் செல்லமுன் எதிரியின் கைகளில் பிடிபட்டுவிடக்கூடாதே என்று எண்ணிய அவள் சயனைட் வில்லையைக் கடித்து, வீரச்சாவைத் தழுவிக்கொண்டாள்.

ஆனால் ......... பாடும் பறவைகளோ உஷாவின் இனிமையான குரலைக்கேட்க வானில் ஆவலோடு பறந்து திரிகிறது. இவளது தோழிகளின் காதுகளில் உஷாவின் இனிமையான குரலில் 'ஒரு கூட்டுக் கிளியாக ' என்ற பாடல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

பெண்ணை மதிப்போம் தொடர்ச்சி
(2 ம் பக்கம் பார்க்க)

Nallur Branch Library

# அன்னா அக்மதோவா

ஏறத்தாழ இரண்டாண்டுகளுக்கு முன் மாஸ்கோவின் இலக்கிய ஏடான 'அக்டோபர்' அன்னா அக்மதோவாவின் (Anna AKhmatova:1889- 1966) 'இரங்கற்பா' தொடர்கவிதையை முழுவதுமாக வெளியிட்டதன்மூலம் இந்த நூற்றாண்டின் மாபெரும் கவிஞருக்கு நீண்டகாலமாகச் செய்யப்பட்டு வந்த அநீதியைத் துடைத்தெறிந்தது. அப்படைப்பு உருவாக்கப்பட்டு ஐம்பத்திரண்டாண்டுகளுக்கும், அப்படைப்பாளி மரணமடைந்து இருபத்தியோராண்டுகளுக்கும் பிறகு அது ரஷ்யாவில் முதன்முறையாக வெளியிடப்பட்டதானது சோவியத் சமூக வாழ்வில் அறநெறிகள் புதுப்பிக்கப்படுவதன் அறிகுறியாகவே அமைந்துள்ளது.

இது நடேஸ்டா மாண்டெல்ஷ்டாம் தனது நினைவுக்குறிப்புகளில் ('நம்பிக்கை கைவிடப்பட்டது') எழுதிவைத்துள்ள வாக்கியங்களை நினைவூட்டுகிறது. ''ஒரு காலத்தில் காலில் போட்டு மிதிக்கப்பட்ட, என்றென்றைக்குமாகத் துடைத்தெறியப்பட்டு விட்டதாகத் தோன்றிய கவிதையின் புத்துயிர்ப்பைப்பற்றி வியப்படைவதை அக்மதோவா ஒருபோதும் நிறுத்திக்கொள்வதில்லை. 'கவிதைக்கு இத்தகைய நீண்ட ஆயுளிருக்கும் என்பதை ஒருபோதும் உணரவில்லை' என்று அவர் எப்போதும் கூறுவார். மேலும், 'கவிதை என்பது நாம் இளமையில் நினைத்தது போன்றது அல்ல" என்று கூறுவார்.

அக்மதோவா, தான் இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதில் பெருமைப்பட்டுக்கொண்டவர். அதேபோல சிம்பலிசம் என்ற இலக்கியப் போக்கை எதிர்ப்பதிலும் பெருமை அடைந்தவர். அவர் எழுதினார்.

'இருபதாம் நூற்றாண்டு, உலகப்போர் வெடித்த 1914 ஆம் ஆண்டின் இலையுதிர்காலத்திலிருந்து தான் தொடங்குகிறது. 19ம் நூற்றாண்டானது வியன்னா காங்கிரஸ் நடந்த நாளிலிருந்து தொடங்கியது போல நாட்காட்டியில் உள்ள நாட்கள் முக்கியத்துவம் அற்றவை. சிம்பலிசம் 19ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதில் ஐயமில்லை. சிம்பலிசத்துக்கு எதிரான எங்கள் கலகம் முற்றிலும் நியாயமானதே. ஏனெனில் நாங்கள் இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் என்பதை உணர்ந்தோம். கடந்த காலத்தில் வட்டமிட்டுக் கொண்டிருக்க விரும்பவில்லை.'' தான் பிறந்த ஆண்டைப்பற்றியும் பெருமைப்பட்டுக் கொண்ட அவர்'

''சார்லி சாப்ளினின்' தோல்ஸ்தாயின் க்ருயெட்ஸர் சோனாட்டா'' ஈஃபில் கோபுரம், டி. எஸ் எலியட் ஆகியோர் பிறந்த அதே ஆண்டில் பிறந்தவள் நான், அந்தக் கோடை [illegible]

பெற்றிருந்த அவர் 1930 களில் இத்தாலிய மொழியையும் கற்றுக்கொண்டார். காரணம் தாந்தேமீது அவருக்கிருந்த மரியாதையாகும். டி. எஸ். எலியட், ஃபாக்னர், ஜாய்ஸ், ஹெமிங்வே ஆகியோரின் படைப்புக்களை மிக விருப்பத்தோடு படித்தார். கீழைத்தேய இலக்கியங்களிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். பிரெஞ்சு, சீன, ஜார்ஜிய, கொரிய, எகிப்திய, ஆங்கில மொழிக் கவிதைகளை ரஷ்ய மொழியில் பெயர்த்தார். அவர் மொழிபெயர்ப்புச்செய்த கவிதைகளில் ரவீந்திரநாத் தாகூரின் படைப்புக்களும் அடங்கும்.

புரட்சிக்குப் பின்னர். அவர் புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட முதலிரண்டு ஆண்டுக்காலமே தொடர்ந்து எழுதி வந்தார். 1972க்குப் பிறகு அவரது கவிதைகள் ஏதும் பிரகாசமாக வில்லை. இரண்டாம் உலகப்போர் காலத்தில் தேசிய உணர்வுக்கும் நாட்டுப்பற்றுக்கும் முதன்மை வழங்கப்பட்டு நாடு முழுவதும் எதிரியைச் சந்திக்க அணி திரண்டிருந்த சமயத்தில் பாஸ்டர்நாக் போன்றவர்களின் எழுத்துகளுடன் அக்மதோவாவின் எழுத்துக்களும் மீண்டும் பிரசுரமாகத்தொடங்கின. 1940ல் அவரது மகன் லெவ் குமிலியெவ் சிறைப்பட்டிருந்தபோது 300 பக்கக் கவிதைத் தொகுப்பு ஒன்று. (10,000 பிரதிகள்) பிரசுரமாயிற்று 1946ல் 50 பக்கக் கவிதை தொகுப்பு ஒன்று (100, 000) பிரதிகள் அச்சடிக்கப்பட்டிருந்தன. ஆனால் விற்பனையாகவில்லை, காரணம், அன்று இலக்கிய உலகில் கோலோச்சிய ஸ்தானோவிசம்தான்.

அக்மதோவாவின் துவக்ககாலக் காதல் கவிதைகள், நிகோலாய் குமிலியோவ் என்ற புகழ் பெற்ற கவிஞருடன் அவருக்கு இருந்த உக்கிரமான ஆனால் நிம்மதியற்ற உறவுகளிலிருந்து பிறந்தவை. அக்மதோவா பள்ளி மாணவியாக இருக்கும்போது குமிலியோவைச் சந்தித்தார். 1910 இல் திருமணம் செய்துகொண்ட இருவரும் 1916 இல் பிரிந்தனர். அவரது ஆரம்ப காலக் கவிதைகளில் ஒன்று இது.

*சூரியனைப்பற்றிய நினைவு என் இயத்தில் சுருங்கி வருகிறது.*
*புல்வெளிகள் மஞ்சள் பாரித்துள்ளன.*
*காற்று கடந்து செல்கையில் பனித்துகள்களைச்சற்று சலனப்படுத்துகிறது.*
*உறைந்துபோன இக்குறுகிய வாய்கால்களில்*
*நீரோட்டம் இல்லை.*
*ஓ, இங்கு இனி ஏதும் நடக்கப் போவது இல்லை.*
*ஒரு போதும் இல்லை.*
*விரிந்த வான் வெளியில் வில்லோ மரம்*
*தெளிவாக விசிறிபோல் விரிந்துள்ளது*
*ஒரே படுக்கையில் நாம் இருவரும்*
*படுக்காமல் இருப்பது நல்லது போலும்*
*சூரியனைப்பற்றிய நினைவு என் இதயத்தில் சுருங்கிவருகிறது*
*இனி என்ன? இருளா?*
*இருக்கலாம். இத்த இருவரின் குளிர்*
*பனிகாலத்தின் குறியாகத்தான் இருக்க வேண்டும்.*

அவரிடத்தில் ஒன்றுகலந்திருக்கின்றன என்றும் ஸ்தானோவ் கூறினார். சோவியத் இலக்கியத்துக்கு அந்நியமான தனிமையுணர்வும் நிராதரவான உணர்வும் அக்மதோவாவின் படைப்புக்களில் விரவியுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார். இத்தகைய கேடுகெட்ட வசைச்சொற்களை அக்மதோவாவிடம் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை.

தனது காலத்தில் நடந்த கொடுஞ்செயல்களைப்பற்றிய மௌனசாட்சியாக இருக்குமாறு அவர் வரலாற்றுச் சூழ்நிலைமைகளால் நிர்ப்பந்திக்கப்பட்டபோதிலும், அவற்றையும் மீறி தனது கவிதைகளை உரத்தகுரல் எழுப்பும் இலக்கியச் சாட்சிகளாக உருவாக்கிவிட்டே மறைந்தார்.

1935 இல் அவரது மகன் லெவ் குமிலியெவும் அவரோடு ஒன்பதாண்டுகள் வாழ்ந்த நிகோலாய் பூனின் என்ற கலை விமர்சகரும் கைது செய்யப்பட்டனர். அச்சமயம் எழுதப்பட்ட ஒரு கவிதை.

*எனக்குப் பிரியமானவர்களை அழைத்துச் செல்கின்றனர் அந்நியர்கள்.*
*பொறாமை சிறிதுமின்றி நான் அவர்களைப் பார்க்கின்றேன்.*
*விரைவில் நான்மட்டும் தனியாகக் குற்றவாளிக்கூண்டில் அரை நூற்றாண்*
*-டுக்காலம்.*

*என்னைச் சுற்றிலும் அவர்கள் முட்டிமோதி வாதாடுகின்றனர்*
*மசியிலோ மரணத்தின் வாடை*
*எல்லாமே காஃப்காவின் கதையைப் போல.*
*திரைப்படத்தில் சார்லி சொல்லுமொரு கதையைப் போல.*

*முனைப்போடு வாதிட்டாலும் அவர்கள்*
*உறக்கத்தின் பிடிப்பில் இருப்பது போலத்தான்*
*மூன்று தலைமுறையைச் சேர்ந்த நீதிமான்கள்*
*குற்றம் என ஒருமனதாய்த் தீர்ப்புரைத்தனர்.*

*பாதுகாவலர்களின் முகங்கள் மாறிக்கொண்டேயிருக்கின்றன.*
*ஆறாவதாக வந்த அரசாங்க வழக்கறிஞரின் இதயம் நின்றுபோய்விட்டது.*
*கொளுத்தும் வெயிலில் எங்கோ*
*வானம் திரைபோர்த்துக் கறுத்துள்ளது.*

*கோடையோ களிப்புடன் பவனி வரும்*
*தூரத்துக் கடற் கரையோரம்*
*நான் இனி ஒருபோதும் நினைத்துப்பார்க்க முடியாத*
*அந்த இழந்துபோன ஆனந்தமான 'எங்கோ ஒரு இடத்தில்'*

ஆனால் அவரது கவிதையாற்றல் கொடுமுடியைத் தொட்டது 'இரங்கற்பா' என்ற தலைப்பில் அவர் எழுதிய தொடர்கவிதைகளில் தான். 1935-1940 ஆம் ஆண்டுகளில் ஸ்டாலினின் 'களையெடுப்புக்கள்' நடந்த பயங்கரமான காலகட்டத்தில் எழுதப்பட்டவை அவை. அவரது மகன் லெவ்குமியோவும் அக்மதோவாவுடன் ஒன்பது ஆண்டுகள் வாழ்ந்து வந்த நிகோலாவ் பூனினும் கைதுசெய்யப்பட்ட பிறகு ஏற்பட்ட பதற்றமும் வேதனையும் உருவாக்கிய படைப்புக்கள் அவை. கட்சிசாராத அறிவாளிகள்மீது நடத்தப்பட்ட பயங்கர ஒடுக்குமுறையின் பகுதியாகவே இக்கைதுகள் அமைந்தன. ஆனால் லெவ் குமிலியோவ்: நிக்கரலாய் குமிலியோவின் மகன் என்பதால் அவரைக் குறிப்பாகக் கைதுசெய்தனர்.

ஆனால் இத்தொடர் கவிதைகளில் வெளிப்படுவது அவரது தனிப்பட்ட வேதனைகளோ சோகங்களோ அல்ல. சிறைகளிலும் உழைப்பு முகாம்களிலும் அடைக்கப்பட்டிருந்த, தங்களது கணவர்களையோ, மக்களையோ, சகோதரர்களையோ, பெற்றோர்களையோ பார்த்து அவர்களுக்கு ஒரு உணவுப் பாட்டலத்தையோ அல்லது ஒரு கடிதத்தையோ தந்துவிட்டு வருவதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருந்த நூற்றுக்கணக்கான மாதர்களுடன் சேர்ந்து சிறை வாசல்களுக்கு முன்பு மாதக் கணக்கில் தான் காத்திருந்த அனுபவத்தை இத்தொடர்கவிதைகளில் பல இடங்களில் அக்மதோவா வெளிப்படுத்துகிறார். பெயரறியா இம்மாதர்களின் அழுகை வெளிப்படுகின்ற ஒருவாயே 'இரங்கற்பா' இதில் கவிஞனின் தனிப்பட்ட அனுபவம் கூட்டு அனுபவத்தோடு இரண்டறக் கலந்து விடுகிறது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

சியின் நூற்றாண்டுவிழாக் கொண்டாடப்பட்டது. நான் பிறந்த இரவு புனிதயோவான் திருநாள்.''

அன்னா அக்மதோவாவின் தாய்வழிப் பாட்டி செங்கிஸ்கானின் வழித்தோன்றல்: தந்தாரிய இளவரசி அக்மதோவா. அவருடைய பெயரைத் தன் புனைப்பெயராகக் கொண்டார் அன்னா. புரட்சிக்கு முன்பே மிகச் சிறந்த கவிஞராக திகழ்ந்த இவர் ஆக்மியிஸ்ட்' குழுவைச் சேர்ந்தவர், எத்தகைய புற நிர்ப்பந்தத்துக்கும் வளைந்துகொடுக்காத, தனது உணர்ச்சிகளை இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக்கூடிய இயல்புடையவர். கவிதைப் படைப்பில் அவர் கையாண்ட சொற் சிக்கனம் வியப்புத் தரும் ஒன்று. ஐரோப்பிய இலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அவர், 1930 களின் துவக்கத்தில், மிகக்கடினமான நிலைகளில் தானாகவே ஆங்கிலம் கற்றுக்கொண்டார். இந்தப் பூமியில் வாழ்ந்துகொண்டு ஷேக்ஸ்பியரின் படைப்புக்களை அவற்றின் மூலமொழியில் படிக்காதிருப்பது வெட்கக்கேடானது என்று கூறினார். புரட்சிக்கு முன்பே ஜெர்மனிய, பிரெஞ்சு மொழிகளில் புலமை

எதிர்ப்புரட்சி சதித்திட்டமொன்றில் பங்கேற்றிருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் 1921 இல் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார் குமிலியோவ். லெனின் காலத்தில் நடந்த மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சி அது. புரட்சிக்குப் பிறகு, ஏராளமான ரஷ்ய அறிவாளிகளும் கலைஞர்களும்வெளிநாடுகளில் குடியேறிய காலத்தில் தான் தன் நாட்டை விட்டுச் செல்ல மறுத்த அக்மதோவா தனக்குக் கட்சி அதிகாரிகளும் இலக்கிய சர்வாதிகளும் காட்டிய பகைமையையும் வெறுப்பையும் கண்டு துவண்டுவிடாமல் தனது சுயகௌரவத்தை உயர்த்திப் பிடித்தார்.

1948ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கட்சித் தீர்மானத்தின்படி அனைத்து எழுத்தாளர்களின் சுதந்திரமும் பறிக்கப்பட்டது. அதனையடுத்து ஜோஸ் செங்கோ, அக்மதோவா போன்றவர்கள் மீது ஸ்தானேவ் நேரடியான தாக்குதல் தொடுத்தார். 'அக்மதோவா பாதி கன்னியாஸ்திரி, பாதிபரத்தை அல்லது கன்னியாஸ்திரி, பரத்தை இரண்டுமே'' என்றும் ''வேசைத்தனமும் இறைவழிபாடும்

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

சாபங்கள் என்னைச் செவிடாக்குகின்றன.
எனதுவேலைநேர ஆடையோ நைந்துபோய்க் கிழிந்துள்ளது
மானுடராய்ப் பிறந்த எவரொருவரையும் விடக்
குற்றம் செய்தவளா நான்?

அதே ஆண்டில் எழுதப்பட்ட மற்றொரு கவிதை:

நான் அருந்தும் நீரில் நீ ஏன் விஷம் கலந்தாய்?
என் சோற்றில் ஏன் மண்ணைச் சேர்த்தாய்?
என் கடைசிச் சுதந்திரத்தை ஏன் பறித்து அதை
வேசியின் ஆபாசப்படுக்கையாக்கினாய்?
என் நண்பர்களின் குரூர சாவை
நான் நையாண்டி செய்யவில்லை என்பதாலா?
என் அப்பாவி நாட்டினை நான்
கடைசிவரை நேசித்ததாலோ?
இருக்கட்டும், ஒவ்வொரு நாட்டிலும்
கவிஞனை அழைப்பவை கண்ணீரும் விரகத்தியும்தான்
நாங்கள் மெழுகுவர்த்தியைக் கையிலேந்தி ஓலமிட்டழுது
எங்களை நாங்களே வருத்திக் கொள்பவர்கள்
பாவ மன்னிப்பைத் தேடி.

---

வாசகர்களிடமிருந்து கருத்துகளை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு:

**சுதந்திரப்பறவைகள், வெளியீட்டுப் பிரிவு,**
**கோண்டாவில்.**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**